3

1974 ஆனி,

தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடு

# தாயகம்

கலை இலக்கிய மாத இதழ்.

விலை சதம் 75

# தாயகம்

கலை இலக்கிய மாத இதழ்

மலர்: 1 1974 ஆனி இதழ்: 3

படைப்பாளிகளுக்கு

தரமான சிறுகதைகள்
கவிதைகள்
கட்டுரைகள்
வரவேற்கப்படும்

—ஆசிரியர்குழு

★

முகவரி

"தாயகம்"
54/16, ஆத்திருப்பு வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

★

தாயகத்தில் வெளிவரும் படைப்புக்களில் உள்ள பெயர்கள், சம்பவங்கள் ஆகியனவற்றிற்கு படைப்பாளிகளே பொறுப்பாளிகள்.

உள்ளே ......

★ தலையங்கம்

★ கதைகள்

பச்சைக்கூப்பன்
புத்துணர்வு
பாவங்களுமில்லை சனியன்களுமில்லை

★ கட்டுரைகள்

வடக்கில் ஒரு பல்கலைக் கழகம்
யப்பானின் பொருளாதார நெருக்கடி

★ கவிதைகள்

நேரம் வருகிறது......
தொடங்கட்டும்......
உற்பத்தி பெருகிட ...

★ கவிதை நாடகம்

மலைகளை அகற்றிய மூடக் கிழவன்

★ கடிதங்கள்

## படைப்பாளிகள் பற்றி.........

இடதுசாரி இலக்கியம் உதயமாகியதை அடுத்துச் சித்தாந்திகள் சிலர் இயல்பாகவே பிழை விட்டுள்ளனர்; சில இடதுசாரி எழுத்தாளர்கள் தம்மை இடதுசாரிகளாகக் காட்டிக்கொண்டு .............. அவ்வாறு எழுதாதுவிடுகின்றனர். சிலர் இடதுசாரி அணியிலிருந்து வலதுசாரி அணிக்கு மாறுவதும், தேசிய இலக்கிய அணியுடன் இணைவதும், புத்தகசாலை உரிமையாளராவதும், எதிர்க்கட்சியினருக்காக உளவாளிகளாவதும் உண்டு. இடதுசாரி இலக்கியத்தில் சலிப்புற்று அகன்ற எழுத்தாளர்கள் தாம் சலிப்படையமுன் படைத்த இலக்கியம் தொடர்ந்து நிலவுகின்றது. அது மாத்திரமன்று; இந்த இடதுசாரி இயக்கம் வளருகின்றது; அதன் தோல்விகளைக் கடந்து அது முன்னேறுகின்றது; தூய இலக்கிய களத்தில் இடதுசாரி இலக்கியம் தொடர்ந்து செழிப்புறுகின்றது.

—ஞாகன்

தாயகம்
கலை இலக்கிய மாத இதழ்

# படைப்புகள் என்பவை எவை?

படைப்புகள்......!

கலை இலக்கிய படைப்புகள் இன்றைய காலகட்டத்தில் எவ்வாறு அமைய வேண்டும்?

ஒவ்வொரு படைப்பும் உருவாகும்போது படைப்பாளிகளின் மனதில் அடிப்படையாக எழும் கேள்வி இதுவாகும்.

படைப்புகள் எப்போதும் வர்க்க சார்புடையவை, எமது படைப்புகள் யாவும் பாட்டாளி வர்க்க சார்புடையவை

பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான சமுதாய மாற்றத்திற்கான புரட்சிப் போராட்டத்தில் எமது கலை இலக்கியப் படைப்புகள் ஓர் ஆயுதமாக விளங்க வேண்டும்,

இன்றைய காலகட்டத்தில் மக்கள் யார்? அவர்களின் நண்பர்கள் யார்? விரோதிகள் யார்? என்பதை குறியிட்டு காட்டவேண்டும்.

மக்களின் எதிரிகளை எதிர்த்துத் தாக்கும் அதே நேரத்தில் மக்களின் நண்பர்களை ஐக்கியப்படுத்தும் பணியினையும் எமது படைப்புகள் செய்ய வேண்டும்.

எதிரி வர்க்கத்தையும் அவர்களது சுரண்டல் அமைப்பையும் தயவு தாட்சண்யமின்றி தாக்கி அழிப்பதில் பாட்டாளி வர்க்கத்தின் ஓர் ஆயுதமாக எமது படைப்புகள் அமைய வேண்டும்.

மக்களின் விரோதிகளை அம்பலப்படுத்தி, கண்ணீர்விட்டு புலம்பி, அல்லது இரக்கப்படுவதுடன் மட்டும் எமது படைப்புகள் நின்றுவிடக்கூடாது. மக்களின் அவல வாழ்க்கையை மாற்றி அமைக்கக்கூடிய பாதையை திட்டவட்டமாகவும் தெளிவாகவும் எமது படைப்புகளில் சுட்டிக் காட்டவேண்டும்.

இன்றைய சுரண்டல் சமுதாய அமைப்பினால் கொடுமைப்படுத்தப்படும் மக்களை அக்கொடுமைகளுக்கெதிராக

கிளர்ந்தெழச் செய்வதும், அவர்கள் மத்தியில் மறைந்திருக்கும் வெல்லல்கரிய சக்தியை வெளிக்கொண்டுவருவதும் சமுதாய மாற்றத்திற்கான போராட்டத்தில் அச்சக்தியை பிரயோகிப்பதற்கும் எமது படைப்புகள் வழிகாட்ட வேண்டும்.

இன்றைய அமைப்புக்கு எதிராக மக்களை அணி திரட்டும் நோக்குடன் அல்லாமல் உதிரித் தனமான கருத்துக்களை பரப்பவோ அல்லது குழப்பமான கருத்துக்களை விதைக்கவோ கலை இலக்கியப் படைப்புகள் உருவாகக் கூடாது.

படைப்புகளுக்கான மூலங்கள் வாழ்க்கையின் அடிமட்டத்தில் உள்ள மக்களிடம் தான் உண்டு. அத்தகைய மக்களிடம் இருந்து பெறப்படும் படைப்புகளே அம் மக்களின் சமுதாய மாற்றத்திற்கான போராட்டத்திற்கு சேவை செய்ய முடியும்.

இன்றைய கால கட்டத்தில் நோக்கமற்ற படைப்புகள் விளம்பரத்திற்கான படைப்புகள், வியாபாரத்திற்கான படைப்புகள், வர்க்க சமரசத்திற்கான படைப்புகள் நிதானமற்ற தெளிவற்ற படைப்புகள் யாவும் பாட்டாளிவர்க்க சார்புடைய கலை இலக்கியப் படைப்புகள் என்று கூறுவதற்கு தகுதியற்றவையும் நிராகரிக்கப்படவேண்டியவையும் ஆகும்.

பாட்டாளி வர்க்க சார்புடைய படைப்புகள் என்ற போர்வையின் கீழ் பாட்டாளி வர்க்க இயக்கங்களை வேர் அறுப்பதற்கான மயக்கப் படைப்புகள் வெளி வருகின்றன அவைகள் இனங் கண்டு நிராகரிக்கப்படல் வேண்டும்.

மனித குல விடுதலை என்ற மகத்தான லட்சியப் பணியில் வளைந்து கொடுக்காத கலை இலக்கியப் படைப்புகள், சொல்லாலும், செயலாலும் பரந்துபட்ட மக்களின் பக்கம் நின்று சேவை செய்ய வேண்டும்.

அத்தகைய படைப்புகளே உண்மையான படைப்புகள்!

ஆசிரியர் குழு

# கடிதங்கள்

தாயகத்தின் இரண்டாவது இதழ் கிடைக்கப் பெற்றேன். இன்றைய நிலையில் நிச்சயமாகவும் ஈவிரக்கமில்லாமலும் தாக்கி அழிக்கப்படவேண்டியது இன்றைய சுரண்டல் அமைப்புதான் என்பதை தாயகம் பிரதிபலிக்கின்றது. இப்பணியை தாயகம் எதிர்காலத்தில் எவ்வித ஊசலாட்டமுமின்றி உறுதியுடன் முன்னெடுக்குமென்ற நம்பிக்கை எனக்குண்டு.

இரண்டாவது இதழில் வெளிவந்த இருகதைகளிலும் இயக்க ரீதியில் மக்களை ஒன்றுபடுத்தி செயல்படத் தூண்டும் தன்மைகள் போதியளவில் வெளிப்படவில்லை. தாயகத்தின் படைப்பாளிகள் இதை கவனத்தில் கொள்வார்களென நம்புகின்றேன்.

சுமதி
கொழும்பு

தாயகத்தில் வந்த கதைகள் தாக்கமானவை, சரியான நோக்குடையவை, விமர்சனத்திற்கு தகுந்தவை முதல் இதழில் வெளிவந்த "ஒரு வறிய குடும்பத்தின் ஒரு நாள் பொழுதே" இப்படியென்றால் நாளைய பொழுது.....? அதற்கும் அடுத்த நாளைய பொழுது ....?

கே. முத்துசாமி
மஸ்கெலியா

தாயகம் கலை இலக்கிய இதழ் தனது சரியான பாதையில் வீறுநடைபோடும் என்பதற்கு முதல் இரு இதழ்களின் தலையங்கங்களும் சிறந்த அத்திவாரமாகும். ஊசலாட்டமற்ற உறுதியான இலக்கியக் கொள்கைக்கான தலையங்கங்கள் தொடர்ந்து வெளிவருவதை நான் விரும்புகின்றேன்.

இ. கருணாகரன்
யாழ்ப்பாணம்

வியாபாரத்திற்காக இலக்கிய சஞ்சிகைகள் வெளிவரும் இந்நாட்களில் தாயகம் நிச்சயம் இலட்சியத்திற்காக தன் பணியாற்றும் என நம்பி வாழ்த்துகிறேன்.

சி. மகேஸ்வரி
கிளிநொச்சி

# நேரம் வருகிறது……

—குருபரன்

கேள்விக் கணைக்கு பதில் எதுவும் சொல்லாது
''வேள்வி'' நடத்துகிறார் வேடுவர் நம் நாட்டில்
நீதி தனைக் கேட்டால் நீண்ட தடி பதிலுரைக்கும்;
சாதி முறை ஏனென்றால், ''சலம்'' பாய்ந்து விடை பகரும்;
கூலி உயர்த்துவெனில், குண்டாந்தடி உயர்ந்துவிடும்;
நாளுக் கொருநிலையாய் நம் பொருள்கள் ஏறிவரும்;
இந்த நிலைமைகளை எதிர்த்துப் போர்தொடுத்தால்
வந்து குவிந்திடுவார் வாகனத்தில் ''வேடுவர்கள்''.
சந்து பொந்துகள் சகலதிலும் தேடிடுவார்,]
வந்து...''அது உண்டோ''... வடிவாகப் பார்த்திடுவார்.
ஒன்று மில்லையென்றாலும் ஒரு பொய்யை சொல்லிவிட்டு
கொன்று குவித்திடுவார் கொள்ளையர்கள் நம்மவரை
கொன்று குவித்தோரின் கொடூர செயல்களினால்,
இன்று எம் நெஞ்சங்கள் இறுக்கமுற்று நிற்கையிலே,
தன்னல உணர்வின்றி தம்முயிரை அர்ப்பணித்த
பொன்மனச் செம்மல்களால் பெற்றெடுத்த புத்துணர்வை;
வெஞ் சினத்தில் வெகுண்டெழுந்த புரட்சிகர உணர்வூடே,
எம் மனத் திலென் றென்றும் நிலை நிறுத்திப் பார்க்கின்றோம்.
கந்த சாமியெனும் கர்த்தாவின் நாயகனை,
நந்தி போல் மறித்து நின்று நரபலி எடுத்தோரின்,
கிளுக் கலை யினிலே கிளர்ந்தெழுந்த தோழர்களை
ஈனக்கொலை செய்து அழித்தொழித்த கொலைஞர்களின்,
எங்குஆணை வரினும் எதிர்கொண்டு சாய்த்தொழிக்கும்,
சங்கானை மண்ணில் சாவணைத்த தோழனது
மங்காத உணர்வுகளால் மயிற்குத்த, மறுபுறத்தில்
நீங்காத வேதனையைக் கொலை புரிந்து தந்தோரின்,
இன்னும் பல பேரை, இயக்கத்தின் தோழர்களை,
சன்னம் துளைக்கவிட்டு செவ்விரத்தம் குடித்தோரின்,
மூலம் நாம் பெற்ற முழு இரத்தக் கடன்களையும்,
காலம் வரும்போது வட்டியுடன் கொடுக்கின்ற
வீரம் நமக்குண்டு; விளையாட்டுப் பேச்சல்ல;
நேரம் வருகிறது நெஞ்சு யர்த்தி நடந்திடுவோம்!!

# பச்சைக் கூப்பன்

— கி. பவானந்தன்

சிரட்டைக்குள் இருந்த நாக்கிளிப் புழுவைக் கையில் எடுத்து, துடிதுடித்து நெளிய, அதை தூண்டிலில் செருகிவிட்டு, தூண்டிலைப் பாத்து துப்பறேன். நான் ஏன் அப்பிடி துப்பினேன் என்கிற விளக்கம்கூட எனக்குத் தெரியாது. கண்ணூறு படக்கூடாது என்கிறதுக்காகத்தான் அப்பிடித் துப்புறது என்கிறது மற்றவங்கள் சொல்கிறபோது கேள்விப்பட்டிருக்கிறேன். அது உண்மைங்கிறது பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

விரல் மீன் பிடிபட்டுதெண்டால் ஒரு நாலைஞ்சு பிடிச்சுக்கொண்டு வேளையோடை வீட்டுக்குப் போயிடலாம். ஆனால் விரலைத்தான் காணல்லையே. சும்மாய் ஒட்டியும், பனையேறியும், கொத்தியும்தான் தூண்டிலை வந்து விழுது. அந்த மீன்கள் கறிக்கு அவ்வளவு நல்லாயில்லை. முள்ளுகளாய்த்தான் இருக்கும்.

குளத்துக்குப் போன இராசாவை இன்னும் காணல்லையெண்டு, காத்துக் கொண்டு இருக்கப்போறா அம்மிச்சி, பெயரளவில்தான் நான் இராசாவாக இருக்கிறன். இராசா எண்டு சொல்ற அளவுக்கு என்னட்டை வசதியில்லை. வசதி இருந்தட்டு தெண்டால் இப்பிடி குளக்கரையிலே குளிரின் கூர்கள் துளையிட தலையிலே சூரியனின் கதிர்கள் குத்திட, கால்கடுக்க நிண்டு மீன் பிடிக்க வேண்டிய அவசியமே வந்திருக்காது. என்ரை அம்மிச்சிக்கு மட்டும் நான் இராசா எண்டா இராசாதான்.

குளக்கரையிலே என்னைப் போல எத்தினை பேரு நிண்டு மீன் பிடிச்சுக்கிறான்கள். அவன்கள் எல்லாம் என்னைப்போல ஆளுகள்தான். பள்ளிக்குப்போய் படிக்கிற வயசிலே, குளக்கரையிலே நிக்கிறம். குளக்கரையிலே நிண்டாத்தான் சாப்பிடுறதுக்காவது கொஞ்ச மீனாவது கிடைச்சிடும்.

பள்ளிக்குப் போய் என்னத்தைப் படிச்சுக்கிழிக்கப் போறம். படிச்சுத்தான் வேலை கிடைக்கவா போகுது? படிக்கிற நேரத்திலை மீன் பிடிச்சாலும் எங்கடை வயிறாவது நிரம்பும்.

அதுதான் கிடக்கட்டும், பள்ளிக்குப் போறதுக்கு நல்லசட்டை இருக்கா? பொத்தகம் வாங்கத்தான் காசு இருக்கா? காலையிலே வயிறு நிறைய சாப்பிட்டிட்டுப் போனாத்தான் படிக்க மனசாவது வரும். அரைகுறைச் சாப்பாட்டோடை போனால் களைப்புத்தான் வரும். களைப்பிலே எப்பிடிப் படிக்க முடியும்? சாப்பிடாமல் போய் படிக்கிறதெண்டாலும், அந்த வாத்தித்தொரைமார் தம்மளை என்ன பேருசொல்லிக் கிட்டு அழைச்சிடுறான்கள்?

''தோட்டக் காட்டானுக்கு எப்பிடி படிப்பு வரும்?'' என்கிறாரு.

எங்களோடை படிக்கிறவங்கள் 'கள்ளத்தோணி', 'இந்தியாக்காரா' என்கிற அடைமொழியோடு அழைச்சிடுறாங்கள் இதையெல்லாம் கேட்டுக்கிட்டு எப்பிடி படிக்கமுடியும்?

நாங்க தோட்டக்காட்டாங்கதான். அதை இல்லேன்னு சொல்லலை. வெள்ளைத் தோல் போத்த தொரை, எப்பவோ, எங்கடை அப்புச்சின்ரை அப்புச்சின்ரை அப்புச்சிக்கு முந்திய அப்புச்சிக்களை, இந்தியாவிலை இருந்து வேலைக்கெண்டு கொண்டுவந்து தோட்டத்திலே 'லைன்லே' இருத்தினான்களாம். அவன்களும் கண்டிச் சீமையிலே நல்லாய் உழைச்சிடலாம் என்கற ஆசையிலே தான் வந்தாங்கள். அப்பிடி வந்தவன்கள் யாருக்கோ உழைச்சுக் கொடுத்திட்டு, தேயிலைச் செடிக்கு உரமாயி, செடியை செழிக்க வைச்சாங்க. எங்க அப்புச்சிக்கு மட்டும், தான் தேயிலைச் செடிக்கு உர மாயிட விருப்பமில்லாததாலே, தோட்டத்தை விட்டு பஸ் ஏறி, றெயிலேறி எல்லாரையும் கூட்டிக்கிட்டு இங்கே வந்தாரு.

எங்களுக்கு இந்தியாவே தெரியாது. அது எந்தப் பக்கப் இருக்கிறது என்கிறது கூட எனக்குத் தெரியாது. நான் பொறந்தது, எங்க அப்புச்சி, அம்மிச்சி எல்லாரும் பொறந்தது இந்த நாட்டிலேதான். எங்க தாய் நாடு இலங்கைதான்.

ஏதோ தோட்டத்திலே இருந்ததாலே எங்க பேச்சு சுத்தமான தமிழ்ப்பேச்சாக வரல்லே. அந்தப் பேச்சுக்காக எங்களை 'இந்தியாக்காரன்' எண்டுசொல்லணுமா! ஏன் அப்பிடிச் சொல்லுறுங்க என்கிறதுதான் எனக்கு இன்னும் புரியல்லே.

கம்பிலே கட்டியிருக்கிற தங்கூசி சுண்டி இழுக்கிறுப்போலே இருக்கு. கொஞ்சம் வீச்சாய்த்தான் இழுக்குது. பெரிய விரல் போலே இருக்கு; மெல்ல மெல்லதான் இழுக்க வேணும். இல்லாட்டி தூண்டிலை விட்டு களற்றிப் போடும்.

சீ! கொன்ளேலே போறபாசி; பெரிய விரல் மீனெண்டு நினைக்க இந்தத் தூண்டில் பாசிக்கே அம்பிட்டுப் பேரச்சு.

ஏமாற்றமாய்ப் போச்சு. எங்களுக்கு ஏமாற்றம் என்கிறது

பழக்கப்பட்டுப்போய்ச்சுது. ஆர் ஆரோ எல்லாம் எங்களை ஏமாத்துறுங்கள்!

ஒட்டி மீன் குஞ்சிலை ஒண்டை தூண்டிலை குத்திப் போட்டுக்கிட்டால், நல்ல பெரிய விருல் மீனைப் பிடிச்சுடலாம். தண்ணியிலே தூண்டிலை வீசியிட்டு, தங்கூசியை கொஞ்சம் கொஞ்சமாய் நீக்கிட்டா சேறு இருக்கிற இடத்திலே நல்ல விருல் மீனைப் பிடிச்சிடலாம்.

அப்பாடி! ஒரு மாதிரியாய்த் தூண்டில் போட்டாய்ச்சு. கொஞ்ச நேரம் பொறுத்துக்க வேணும். அதுக்குள்ளே குளத்திலே ஒருக்கா நீந்தி முழுகிடலாம்.

குளத்திலே முழுகிறதெண்டால் எனச்கு கொள்ளை அசை. தோட்டத்திலே இருக்கிறப்போ மலேலே இருந்து ஆறு பாய்ஞ்சு வரைக்கே, அந்தக் குழு குழு தண்ணியிலே நீந்திக் குளிச்சு நல்ல பழக்கம். இந்த ஊருக்கு வந்தப்புறம், குளத்திலே நீங்கிறப்போ எவ்வளவு சொகமாயிருக்கு.

குளத்திலே சுருசுக்குப் பக்கத்திலே இருக்கிற கல்லிலே இருந்து குதிச்சு நீந்திறதெண்டால் எவ்வளவு நல்லாயிருக்கும். தண்ணிக்கே, மீன்மாதிரி சுழி ஓடுறதெண்டால் நல்லாயிருக்கும். குளத்திலே நீந்திப்போக எனக்கு பயமே இருக்காது.

அதோ, தூண்டில் ஒருமாதிரி இழுக்கிருப்போலே. அப்பிடியே கரையாலே போய்த்தான் தூண்டிலே இழுத்துட வேணும்.

நல்ல மழை பெய்ஞ்சுதெண்டால் வான் பாயும். புதுசா வந்த தண்ணியைக் கண்டு மீன்கள் துள்ளிப் பாயும். அப்பிடி வான் பாயேக்கே துள்ளி வருகிற மீன்களை கத்தியாலே வெட்டிப் போடலாம். தூண்டிலே பிடிக்கிறதிலும் பார்க்க அது எவ்வளவோ சொகமாயிருக்கும்.

தூண்டிலே மெல்ல மெல்ல இழுத்துப் போட்டன். நல்ல பெரிய விருல் மீன்தான் அம்புட்டிருக்கு. விருலின் கழுத்தை ஒரு மாதிரி கஷ்டப்பட்டு முறிச்சு குடுவைக்கு உள்ளே போட்டுட்டன். இன்னும் ஒண்டு பிடிச்சால் கறிக்குக் காணும்.

தூண்டிலிலே புழுவைக் கொழுவி தண்ணிக்குள்ளே போட்டிட்டேன்.

மீன் பிடிச்சுக் கொண்டு நிண்டவன்கள் எல்லாம் பனையேறி மீன் துள்ளிப் பாயுறப்போலே ஓடுறுன்கள். அவன்கள் ஏன் ஒடுறுன்கள்? கண்ணுக்குத் தெரியிறப் போலே தூரத்திலே காற்சட்டை போட்ட துரைமார் வாறுங்கள்.

அவன்கள் யாரோ கந்தோர்க்காரங்க. தூண்டிலை எல்லாம் பறிச்சிடுவாங்க. குளத்திலே மீன் பிடிக்கக் கூடாதாம் மீன் பிடிக்கிறதாலே குளக்கட்டு பழுதாகுமாம். அதுக்காக குளத்திலே மீன்பிடிக்கக்கூடாதெண்டு அவன்

கள் சட்டம் போட்டிருக்கிறுன் கள்.

அரைக்காட்சட்டை போட்டவன் என்கிட்டதான் ஓடி வாருன். அவனைக் கண்ட பயத்திலே என்னுலே ஓட முடியல்லே. அவன் என் கையைப் புடிச்சுட்டான்.

''டேய், நடவடா. உன்னை யாரடா மீன் பிடிக்கச் சொன்னது? மீன் பிடிக்கக் கூடாது என்கிறது தெரியாதா? நடவடா!''

டீயாரோ கந்தோரிலை இருந்து வந்த அந்த அரைக்காற் சட்டைக் காரன் என் பிடரியிலே ஒரு போடு போட்டு, கையைப் பிடிச்சு இழுத்துக்கிட்டு போனுன். என்னேடை நிண்டு மீன்பிடிச்சவங்கள் எல்லாம் ஓடியிட்டாங்க. பிடரியிலே போட்ட அடி விர் விர் என்று வேதனையாயிருக்குது, அதை நினைக்க அழுகைதான்வருகுது. கண்ணுலை பொல பொல எண்டு தண்ணி பாயுது. அவன் இறுக்கி அடிச்சிட்டான்.

''டேய், இனி ஒருநாளும் மீன் பிடிக்க வரக்கூடாது. சுறுக்காய் ஓடடா!'' இன்னெரு தொரை என்னை விடுவித்துவிட்டார். நான் ஒண்டுமே பேசாமல், பிடிச்ச மீனையும் எடுத்துக்கிட்டு ஓட்டமாய் ஓடி வந்துட்டேன்.

தப்பி ஓடி வருகிறபோது எனக்கு மனசுக்குள்ளே கவலையாய் இருந்திச்சு. நாளைக்கு எப்பிடி மீன் பிடிக்கிறது எண்ட கவலைதான், குளிக்கிறப்போ மீன் குஞ்சுகள் புண்ணிலே கொத்திருப்போலை என் மனசை கொத்திக் குதறிக்கிட்டு இருக்கு. தூண்டிலும், தங்கூசியும் வாங்க காசுக்கு எங்கே போறது? என்கிற கவலை என்னை வாட்டுது.

அவன்கள் தூண்டிலைக் கொண்டு போயிட்டாங்க. தூண்டிலை மட்டுமா அவன்கள் பறிச்சாங்க!

எங்களுக்கு குடியிருக்கிறதுக் கெண்டு ஒரு துண்டுக் காணிகூட இல்லை. இந்த ஊரிலேதான் எவ்வளவு காடு பத்தையாய் வளர்ந்திருக்கு. இவ்வளவு காடு இருந்தும் நாங்க குடியிருக்கிறதுக்கு காணியில்லை.

எனக்கு நல்ல நினைவு இருக்கு. நாங்க தோட்டத்திலே இருந்து வந்து மூணு வருஷம் இருக்கும். இத்தி மரத்துக்குக் கீழே எங்களை இருத்திக்கிட்டு கேர்யில் கிணத்திலே தண்ணி அள்ளிக்கிட்டு வந்து, சுடவைச்சு சாயம் போட்டு தந்திட்டு, அப்புச்சியும், அம்மிச்சியும் ரெயில் ரேட்டுக்குப் பக்கத்திலே சும்மாய்க் கிடக்கிற காட்டை வெட்டிஞங்க.

நாங்க பகலிலே மர நிழலிலே இருந்தோம். ராவிலே பனியுக்கை வானத்துக்குக் கீழே சந்திர ஒளி எங்களை அணைச்சிடப் படுத்தம். அப்போ எல்லாம், என்னையும், தங்கச்சிப் பாப்பா

வையும் பனிக்கூர்கள் குத்திக் குதறி நடுங்க வைச்சுது. அம்மிச்சி தன் ஒரச் சீலையாலே இழுத்து எங்களுக்குப் போத்திட்டு பனிக்கூர்களின்ரை தாக்குப் பிடிக்காமல் எங்களை அணைச்சுப் படுத்திடுவா.

அப்புச்சியும், அம்மிச்சியும் காட்டை வெட்டி நெருப்புவைச்சாங்க. சோழக் காத்திலே நெருப்பு எரியிறப்போ எவ்வளவு அழகாய் இருந்திச்சு. பெரிசாய் எரியிறப்போ இலைகள் எல்லாம் 'படீர் படீர்' என்று வெடிக்கிற சத்தத்தைக் கேட்டு என் மனசிலே ஆனந்தக் கட்டாறு வெள்ளம் பாயுறப்போல பாய்ஞ்சுது.

அம்மிச்சியும், அப்புச்சியும் தோட்டத்திலே வேலை செஞ்ச மாதிரி இந்தக் காட்டிலேயும் வேலை செஞ்சாங்க. சின்னக் குச்சுக் குடிசையும் கட்டியிட்டாங்க. வெட்டி விழுத்தின மரக் கட்டைக்கு ராவிலே நெருப்பு வைப்பாங்க. ராவிலே யானைச்சத்தம் கேட்கிறப்போ அப்புச்சி மணி அடிச்சு சத்தம் போட்டு அதுகளை விரட்டிப் போடுவாரு.

காடாயிருந்த இடத்திலே வாழை வைச்சாங்க. தென்னை, மாமரம், கொய்யாமரம் எல்லா மரமும் வைச்சாங்க. காணியைப் பாக்கிறப்போ எவ்வளவு நல்லாயிருக்கு. இப்ப எல்லாம் எங்களுக்கு கஸ்டமே தெரியிறதில்லை. ஒரு குறையும் இல்லே. தோட்டத்திலே இருந்ததிலும் பாக்க இங்கே நல்லாய்த்தான் இருக்கிறம்.

குச்சுக் குடிசை இருந்த இடத்திலே இப்ப பெரிய வீட்டைப் போட்டாரு அப்பிச்சி. ஒய்வாய் இருக்கிற நேரத்திலே அப்பிச்சி யாருக்கும் வேலை செய்யப் போவாரு.

அப்பிச்சி வயலுக்குப் போயிட்டாரு. காணிக்குக் கீழே எள்ளு வெட்டிக்கிட்டு இருந்தா அம்மிச்சி, எங்க வீட்டுக்கு முன்னாலே ஜீப் ஒண்டு வந்து நிக்குது. நீட்டுக் காற்சட்டை போட்டவங்க அதிலேயிருந்து இறங்கி எங்க வீட்டைதான் வாறுங்க. அவங்க ஏன் வாறுங்க என்கிறதுதான் தெரியல்லே.

''முனியாண்டி ..... முனியாண்டி...'' அப்புச்சியின் பேரைக் கூப்பிட்டாங்க. அவங்களைக் கண்ட எனக்கு பயமாயிருந்திச்சு. காணிக்குக் கீழே நின்ட அம்மிச்சியைக் கூவி அழைச்சேன். அம்மிச்சி அவங்க நின்ட இடத்துக்கு ஓடி வந்துட்டா.

''வணக்கம் தொரைங்க'' தோட்டத்திலே இருக்கிறப்போ வெள்ளைக்காரத் தொரைமாருக்கு சலாம் போடுறாப் போல வந்தவங்களுக்கு அம்மிச்சி சலாம் போட்டாங்க. அம்மிச்சி சலாம் சொன்னதை அவங்கள் கவனிக்கவே இல்லே. வந்தவங்களிலே ஒருத்தர் காணியைப் பார்த்துக்கிட்டு இங்கிலீசிலே மற்றவர்ட்டை ஏதோ சொன்னரு.

"முனியாண்டி எங்கேபோட்டான்? முனியாண்டி பெண்சாதி நீ தானே!"

அவங்க கேட்ட கேள்வி எல்லாத்துக்கும் அம்மிச்சி பதில் சொன்னு

"ஏ! உங்களை யார் இந்தக் காணிக்கை அடாத்தாய் வந்து இருக்கச் சொன்னது. யாரைக் கேட்டு காடு வெட்டி வீடு கட்டினீங்கள்?"

"குடியிருக்கிறதுக்கு எங்களுக்கு காணியில்லேங்க. சும்மாய் இருந்த காட்டை வெட்டிக்கிட்டுக் குடியிருக்கிறோமுங்க தொரை......"

"இது கவுண்மேந்துக் காடல்லவா! காட்டை அடாத்தாக வெட்டினது குற்றம். வீடு கட்டினது குற்றம். உங்களுக்கு இது ஒண்டும் தெரியாதா?"

அம்மிச்சியைப் பாத்து இப்பிடி ஒருத்தர் கேட்டாரு.

"தொரை, எங்களுக்கு ஒண்டுமே தெரியாதுங்க. குடியிருக்க மட்டும் ஒரு துண்டுக் காணி தந்தாப் போதுமுங்க."

"உங்களுக்குப் பச்சைக் கூப்பன்தானே; பச்சைக் கூப்பன் காரருக்குக் காணி தரச் சட்டத்திலே இடமில்லே. 24 மணித்தியாலத்துக்குள்ளே காணியை விட்டு வெளியேறி விட வேண்டும். வெளியேறாவிட்டால் வீட்டுச் சாமான்களை வீசிப்போட்டு நெருப்புத்தான் வைப்பம். உங்களையும் பிடிச்சு அடைச்சு வழக்குப் போட்டிடுவம்..."

"தொரை எங்களுக்குப் பச்சைக் கூப்பன்தாங்க. படிச்ச நீங்களே இப்பிடிச் சொல்லிட்டா நாங்க எங்கே சாமி போறது? இந்த அநியாயத்தை யாரிட்டே சாமி சொல்றது? நீங்கதான் கருணை செஞ்சு உதவி செய்யணும் சாமி. இந்தப் புள்ளையளோடை எங்கே சாமி நாங்க போறது.."

"எங்களாலை ஒண்டும் செய்ய முடியாது. நாங்கள் சட்டப்படி தான் செய்வோம். உங்கடை தலைவிதியை நிர்ணயிக்க எங்களாலையும் முடியாது; உங்களைப் படைச்ச கடவுளாலையும் முடியாது. நீங்கள் காணியை விட்டு வெளியேறிப்போகத்தான் வேண்டும்....."

அவங்க ஜீப்பிலே போயிட்டாங்க, அம்மிச்சி அழுதுகிட்டே இருந்தாங்க.

வயலாலை வந்த அப்பிச்சியிடம் அம்மிச்சி எல்லாத்தையும் சொல்லிக்கிட்டா.

அப்புச்சி யோசிச்சுக்கிட்டே இருந்தா. இராவு ஒருத்தரும் சாப்பிடவே இல்லை. அப்புச்சியும் அம்மிச்சியும் தூங்கவே இல்லை. எனக்கும் தூக்கம் வரல்லே. விடியிறப்போ கொஞ்சம் கண்ணை அயர்ந்து மூடியிட்டன். சூரியன் வீட்டுக் கிடுகாலை நுழைஞ்சு முதுகிலே குத்துறப்போ

தான் பாயைவிட்டு எழுந்துகிட்டேன்.

அம்மிச்சி மரவெள்ளிக் கிழங்கு அவிச்சு, சம்பலோடு காலைச் சாப்பாடாக தந்தா. வயிறுநிறையச் சாப்பிட்டன். சாப்பாடு முடிஞ்சதும், முத்தத்திலே நிண்டு விளையாடிக்கிட்டு இருந்தன்.

நேற்று ஜீப்பிலே வந்தவன்கன் எங்க வீட்டை வந்து, அப்புச்சியைக் கூப்பிட்டாங்க. அப்புச்சி அவங்களோடை என்னவோ கதைச்சா. அவங்கள் எதையும் கேக்கிறதாகத் தெரியல்லே.

''முனியாண்டி, அதிகம் பேசாதே! நேற்று வந்து சொல்லியும், நீ இன்னும் காணியை விட்டு வெளிக்கிடல்லே. கடைசியாய்ச் சொல்றன், காணியை விட்டுட்டு வெளியிலே போங்காணும் .....''

''சாமி, நாங்க எங்கே போறது ..'' அப்புச்சி கையிரண்டையும் எடுத்து கும்பிடு போட்டுக்கிட்டு கேட்டாங்க.

விதானையார், வீட்டுக்கே இருந்த சாமானை எல்லாம் எடுத்து வெளியே போட்டாரு. எங்க உடுப்பிலே இருந்து மற்ற எல்லாச் சாமான்களையும் வெளியே எடுத்து எறிஞ்சாங்க. சட்டிபானையெல்லாம் பொடிப்பொடியாய்ப் போய்ச்சுது.

அம்மிச்சியும், அப்புச்சியும் 'ஓ' எண்டு அழுறுங்கள். நானும் அழுறன். தங்கச்சிப் பாப்பாவும் எங்களைப் பாத்துட்டு அழுறுள். சாக்குப் பையிலிருந்து நெருப்புப் பெட்டியை எடுத்து குச்சு ஒன்றைக் கிழிச்சு குடிசைக்கு மேலே எறியிறுன், அவன்களோடை வந்த தொரை. வீடெல்லாம் நெருப்புப் பிடிச்சு எரியுது. அப்புச்சியால் ஒண்டும் செய்ய முடியல்லே.

சட்டமாம் சட்டம். சட்டம்தான் நெருப்பு வைக்கச் சொல்லிச்சுதாம். அதனுலே இவங்க வந்து நெருப்பை வைச்சிட்டாங்க. முதன் முதல் காடு எரியிறப்போ நெருப்பைப் பாத்து நான் சந்தோஷப்பட்டு ஆரவாரித்தேன். ஆனுல், இப்போ வீடு எரியிறப்போ நெருப்பைப் பாத்து என்னுலே ஆரவாரிக்க முடியல்லேயே! தொண்டை வறளுமட்டும் அழுதுட்டேன். தாகம்தான் மிச்சமாயிடுச்சுது.

வீடு எரிஞ்சு போட்டுது. அப்புச்சியும், அம்மிச்சியும்வைச்ச தென்னை எல்லாம் கருகிப்போயிச்சுது. அது கருகின மாதிரி அப்புச்சியின் முகமும் கருகிப் போயிச்சுது. நாங்கள் எங்கே போய் இருக்கிறது?

வீடு எரிஞ்சது பற்றி அப்புச்சி எங்க தலைவருக்கு தந்தி கொடுத்தாரு. ஏஜெண்டு தொரைக்கும் தந்தி கொடுத்தாரு. ஆனுல் அந்தத் தந்தியாலே எதுவுமே நடக்கல்லே!

எங்களாலே வளர்ந்துகிட்ட எங்கடை தலைவர்மார் நல்ல வசதியா இருக்கிறுங்க. எங்க

கஷ்டத்தைச் சொல்லிக்கிட்டு அவங்கள் சொகமாய் வாழுறாங்க அவங்களாலே எங்களுக்கு எந்தப் பிரயோசனமுமே கிடைக்காது. பெரியவங்க பெரியவங்கதான். அவங்க பெரியவங்களோடை தான் சேருவாங்க. அவங்கடை கண்ணுக்கு எங்க கஷ்டம் தெரியவே தெரியாது.

இனவெறியைச் சொல்லிக்கிட்டு வளர்ந்துகிட்ட சங்கத் தலைவர்மாரை எங்க அப்பிச்சி நம்பிறுரு. அவங்கள் எங்களை ஏமாற்றியிட்டாங்க. இவங்களிலே நம்பிக்கை வைச்ச நேரத்திலே, இந்த நாட்டிலே வாழுற கஷ்டப்படுற மக்களோடை நாங்க ஒண்டு சேர்ந்து, அவங்க சேர்ந்துகிட்ட சங்கத்தோடை சேர்ந்துக்கிட்டோ மெண்டால், அவங்கடை சட்டத்தாலே எங்க வீட்டுக்கு நெருப்பு வைக்கிறப்போ சங்கம் பார்த்துக்கிட்டு இருந்திருக்குமா?

நாங்க எல்லாம் ஒண்டு சேரத்தான் போறம்; என்கிறது எனக்குத் தெரியுது.

இல்லாட்டா ரேட்டுப் போடுறவங்க லைன்லே இருக்கிற பியசேனு, எங்களைக் கூட்டிக்கிட்டு பக்கத்துக் காம்பருவிலே இருக்க விட்டிருப்பாரா? அவரு நல்லவரு. அவரு எங்களைப்போல ஒருத்தரு நல்ல நேரத்திலே கை கொடுத்தாரு.

இன்டைக்கு என்ரை தூண்டிலைப் பறிச்சாங்க அண்டைக்கு எங்க காணியையும் பறிச்சு வீட்டுக்கு நெருப்பையே வைச்சாங்க. நாங்க இருந்த காணிக்கே விதானையாற்ரை மச்சான் வந்து வீடு கட்டியிருக்கிறுரு. காணி அதிகமாய் வச்சிருக்கிற அவருக்கு எங்கடை காணியைக் கொடுக்கிறதுக்கு சட்டமிருந்த. சும்மாயிருக்கிற காட்டுக்கை காணியில் வாதவங்க போய் இருக்க சட்டத்திலே இடமில்லை!

இங்கேயே பொறந்த எங்களுக்கு பச்சைக் கூப்பன் தந்தாங்க. பச்சைக் கூப்பன் இருக்கிறதாலே எங்களுக்குக் குடியிருக்க காணிகூட எடுக்கேலாமல் இருக்கு.

இண்டைக்கு லைன்லே இருக்கிறம். நாளைக்கு நாங்க எங்கே இருப்போம் என்கிறது இன்னும் நிச்சயமாய்த் தெரியல்லே. ஆனல் எங்களைப்போல உள்ளவங்க உதவி நிட்சயமாய் எங்க பக்கம் என்கிறது தெரியிது.

நாங்கள் பச்சைக் கூப்பன் காரர்களல்ல, நாங்கள் மனிதர்கள்!

---

# யப்பானின் பொருளாதார நெருக்கடி

நமது நாட்டு முதலாளித்துவ அரசியல் வாதிகள் அடிக்கடி பொருளாதார முன்னேற்றத்திற்கு உதாரணம் காட்டும் நாடு யப்பான் நாடாகும். கைத்தொழில் வளர்ச்சியும் விவசாய முன்னேற்றமும் கொண்ட செல்வம் கொழிக்கும் நாடு யப்பான் என்றும், ஒரு குறிப்பிட்ட முதலாளிகள் ஒரு நாட்டின் பொருளாதாரத்தை வளம்படுத்த முடியும் என்றும் மக்களை நம்பச் செய்வதற்கு யப்பான் நாட்டை உதாரணம் காட்டி வருகிறுர்கள். ஆனல் யப்பானிய பொருளாதாரம் இன்று பெரும் ஆட்டம் கண்டுள்ளது.

இரண்டாவது உலக யுத்தத்தின் பின் மேற்கத்திய நாடுகள் ஆசியாவில் தமது சுரண்டல் சமுதாய அமைப்புக்குப் போட்டியாக சீன உதயமாவதைக் கண்டனர். சீன உதயமானதும் ஆசிய மக்களின் கண்கள் இயற்கையாகவே அந்த நாட்டை நோக்கின. இதன் எதிர்கால விளைவுகளை உணர்ந்து கொண்ட மேற்கத்திய நாடுகள் சீனாவிற்குப் போட்டியாக யப்பான் வளர்ச்சியடைய வேண்டுமென விரும்பினர். உள் முரண்பாடுகள் பல இருந்த போதும் யப்பானை இராணுவ ரீதியாகக் கூட வளர்ப்பதற்கு அமெரிக்கா தலைமையில் பெரும் முயற்சி எடுக்கப்பட்டது. எனினும் சீனாவின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கு இவர்களால் முடியாது போயிற்று. காரணம் சீனாவின் சமுதாய அமைப்பு தொழிலாளி வர்க்கத்தின் தலைமையிலான சோஷலிச அமைப்பாக வளர்ச்சி அடைந்து வந்தது.

இச்சந்தர்ப்பத்தில் யப்பானின் பொருளாதாரம் ஆட்டம் கண்டுள்ளதற்கான சில உண்மைகளை நாம் காண்பது அவசியம்.

மிற்சுபிசி வங்கியின் பொருளாதார ஆராய்ச்சிப்பிரிவின் கூற்றுப்படி இந்த ஆண்டின் பொருளாதார நடவடிக்கை மந்தமாக இருக்கும். நுகர்வோர் செலவு அதிகரிக்கும். 1973-ம் ஆண்டில் புகுத்தப்பட்ட கடன் வழங்குவதில் உள்ள கடினமான கட்டுப்பாட்டின் விளைவாலும் வேறு பல காரணங்களினாலும் வர்த்தக முதலீடுகள் குறிப்பிடத்தக்க அளவிலும், மிக விரைவாகவும் வீழ்ச்சியடையும்.

பெரும் ஆலைகளில் முதலீடுகள் குறையுமென வங்கி எதிர்பார்க்கின்றது. 1972, 1973 ஆகிய ஆண்டுகளில் பிரமிக்கத்தக்க அளவில் வளர்ச்சியடைந்த முதலீடுகள் இவ்வாண்டின் முதற் காலாண்டில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியடைந்தன. கடந்த காலங்களில் நிலையான முதலீடுகளின் குறிப்பிடத்தக்க, நிதானமான அதிகரிப்பு யப்பானின் உயர்ந்த வருடாந்த வளர்ச்சி விகிதத்திற்கு முக்கிய காரணமாயிருந்தது. யப்பானின் வருடாந்த வளர்ச்சிக்கு பிரமிக்கத்தக்க முதலீடுகளே கிட்டத்தட்ட முழுக்காரணமாயிருந்தது என்பது ஆராய்வின் போது தெளிவாகியுள்ளது. 1961-66ல் முதலீட்டு அதிகரிப்பு வருடாந்த உற்பத்தியை 9·1% தால் அதிகரிக்கச் செய்தது. அண்மையில் அந்த நாட்டில் முதலீடு செய்வதில் ஏற்பட்டுள்ள மாற்றம் அதன் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதிக்கும்.

உருக்கு பொலிவைனல் குளோறைட் (பீ. வீ. சி.) செயற்கை ரப்பர், கடுதாசி கடுதாசிக் கூழ் போன்ற கைத்தொழிற் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

யப்பானில் வர்த்தகத்தில் ஏற்பட்டுள்ள பாதகமான நிலையை மோட்டார் உற்பத்தித் தொழிலில் கண்டு கொள்ளலாம். அந்த நாட்டில் மிகமோசமான பிரச்சினைகளை எதிர்நோக்குவது மோட்டார் வாகன உற்பத்தித் தொழிலாகும். சென்ற ஆண்டில் மோட்டார் வாகன உற்பத்தி திட்டமிட்டு 6% குறைக்கப்பட்டது. புதுக்கார்களின் விலை அதிகரிப்பாலும், மோட்டார் வாகனப் பராமரிப்புச் செலவு அதிகரிப்பாலும் விற்பனை முயற்சியை ஊறுவிளைவித்ததாலும் புதிய மோட்டார் வாகனப் பதிவு குறையத் தொடங்கியுள்ளது. இவ்வருடம் ஏப்பிரல் மாதம் தொடக்கம் மோட்டார்

வாகனங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள புதிய அதிகரித்த வரி வாகன உற்பத்தியாளருக்கு மேலும் பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளது. மேற்கூறிய காரணங்களினால் இந்த ஆண்டில் புதிய கார்களுக்கான கிராக்கி சென்ற ஆண்டு இருந்ததைவிட 20% குறைவாயிருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

எரிபொருளும் யப்பானின் பொருளாதார நெருக்கடிகளை ஒரு புதிய மோசமான நிலைக்குத் தள்ளுகின்றது. யப்பான் தனது எரிபொருள் தேவைகளில் 85% ஐ இறக்குமதி செய்கிறது. இறக்குமதி செய்யப்படும் எரிபொருட்களில் 80% மானவை மட்டரக எண்ணெய் வடிவில் மத்திய கிழக்கிலிருந்து பெறப்படுகின்றது. தற்போதைய விலைகளில் எதுவித மாறுதலும் ஏற்படாவிடில் யப்பான் இந்த ஆண்டிற்கான எண்ணெய் இறக்குமதிக்கு ஆயிரம் (1,000) கோடி அமெரிக்க டொலர்களைச் செலவு செய்ய வேண்டும். இந்தத் தொகை சென்ற ஆண்டில் செலவிட்ட தொகையிலும் 40% கூடுதலானதாகும்.

நிலக்கரி, லிக்னைட் படிவங்கள் யப்பானின் மொத்த சக்தித் தேவையின் 9% த்தை மட்டுமே பூர்த்தி செய்கிறது. ஆனால் அதன் இருப்புக் கூட குறைந்து கொண்டு செல்கின்றது. 1968ல் உற்பத்தி நான்கு கோடி அறுபது இலட்சம் மெட்றிக் தொன் என்ற அளவிலிருந்து 1972-ல் மூன்று கோடி முப்பது இலட்சம் தொன் ஆகக் குறைந்துள்ளது. யப்பானின் எண்ணெய் உற்பத்தி மிகச் சொற்பமே.

யப்பானின் பெற்றோ-இரசாயன தொழில் உற்பத்தி வேகம் குறைவதனால் பிளாஸ்டிக் தொழில் நேரடியாகப் பாதிக்கப்படுகின்றது. பசளை உற்பத்தி செய்வதற்கான அமோனியாவும், நைத்திரஜனும் உற்பத்தி செய்வது குறைவடையும் ஏற்கனவே யப்பான் ஆசியநாடுகளின் பசளைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது போய் விடுமென எச்சரித்துள்ளது. திட்டமிடப்பட்டபடி எண்ணெய் இறக்குமதியில் 24 லட்சம் தொன்களால் குறைக்கப்படுமானால் பசளை உற்பத்திக்குச் செல்லும் எண்ணெய் 1% (ஒரு வீதம்) குறைக்கப்படும். இதனால் இந்த ஆண்டு 24,000 தொன் பசளை குறைவாகவே உற்பத்தி செய்யப்படும். ஒரு தொன் பசளை குறைவடையுமானால் பத்துத் தொன் உணவுத் தானியம் குறைவடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

யப்பானின் பொருளாதார நிலையை அதன் அந்நியச் செலவாணி இருப்பிலிருந்து ஓரளவு எடை போடலாம். அந்த நாட்டின் கொடுப்பனவு மிகுதி 1973 மார்ச் மாதத்திலிருந்து சாதகமற்ற நிலையில் இருந்து வருகின்றது. 1973 பெப்ரவரியில் 1900 கோடி அமெரிக்க டொலராயிருந்த அந்நியச் செலவாணி 1973-ன் முடிவில் 1220 கோடி டொலராகச் குறைந்தது. இந்த ஆண்டின் முடிவில் இது 1000 கோடி டொலராகக் குறைந்து விடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. யப்பானின் நாணயமான 'யென்' ஏற்கனவே பலவீனமடைந்து பொருளாதார நெருக்கடிகளை தோற்றுவித்துள்ளன.

இன்று யப்பானில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி யப்பானிய உழைக்கும் மக்களை போராட்டப் பாதையில் அணிவகுப்பதற்கு மேலும் வழி வகுத்துள்ளது. அங்கு ஏற்கனவே உருவாகியுள்ள தொழிலாளர்கள் வாலிபர்களின் புரட்சிகரப் போராட்ட அலை பொங்கி எழும் என்பது உறுதியாக்கப்பட்டு வருகிறது.

★ சிறுகதை

# புத்துணர்வு

— சுமதி —

1

''சுதந்திரம் கிடைத்து விட்டது''
இப்படி ஒருநாள் பத்திரிகைகளில்
தலையங்கம் வந்தது
மக்களெல்லாம் விழுந்து விழுந்து படித்தார்கள்
படிக்கத்தெரியாத விவசாயி ஒருவன் முழித்து நின்றான்
படித்தவர் ஒருவர் அவனை நோக்கி 'சுதந்திரம் கிடைத்து
விட்டதாம்' என்றார்
அவனும், 'கிடைத்து விட்டதா?'' என்று கேட்டுத் தன்வழி
போனான்
படித்தவர் பலபேர் சந்தியில் நின்று விளாசித் தள்ளினர்
விவசாயி போயொரு ஒரத்தமர்ந்தான்
''இனிமேல் எங்கடபாடு வெற்றி''
''இனி ஒருமாதிரி வாழலாம்''
சிற்சில வசனங்கள் சிதறி விழுந்தன
விவசாயி எழுந்து மெல்ல நடந்தான்
நடக்கும் போதொரு புதிய நினைப்பு

2

புதிய நினைப்பு உள்ளத்தூர
புதிய கனவுடன் மனைவியைப் பார்த்தான்
சிரிப்பு முத்துச் சிதறிவிழுந்தது
விழுந்ததை விழுங்க அவளும் சிரித்தாள்
பின்பு

எழுந்து நடந்தான் வயலினை நோக்கி
வயலோ பச்சைப் பசுமை நிறம்
பயிர்களை
அவன் ஊற்றி வளர்த்த வியர்வைக் கட்டிகள்
மெல்ல வரம்பில் நின்று அந்தப் பரப்பை ஊர்ந்தான்
பிரிந்து ஓடும் ஆறுகள் போலே
வியர்வை பாய்ந்து ஓடும் மேனிகள் கண்டான்
பின்பு
களையைப் பிடுங்க மெல்லக்குனிந்து கையை விட்டான்
களைகள் கத்தையாய்க் கையில் வந்தன
அப்போது,
"அரசியல் சட்டம் போட்டாச்சாம்"
"இனி ஆள்வதெல்லாம் நாம் தானும்"
என்று இருவர் கதைத்துச்செல்லும் மெல்லிய சத்தம்
அவனை அடைந்தது
"அப்படியா?" அவனுக்குள்ளே அவனே கேட்டான்
நிமிர்ந்து வானத் திரையைப் பார்த்தான்
வெய்யோன் நடுவில் வந்தது கண்டான்
விவசாயி எழுந்து மெல்ல நடந்தான்
நடக்கும் போதொரு புதிய நினைப்பு

3

புதிய நினைப்பு உள்ளத்தூர
புதிய கனவுடன் உள்ளே நுழைந்தான்
மனைவி சுருண்டு, படுத்திருந்தாள்
அவளின் கேசம் பறந்து திரிந்தது
பானைகள் எல்லாம் அப்படி அப்படி
மூலையில் கிடந்து தூங்குதல் கண்டான்
மெல்ல
துடிக்கும் வயிறைக் குனிந்து பார்த்தான்
அழுகின்ற ஒலி மெல்லக் கேட்டது
இதன்பின்பு
ஆலமரத்தடி போவொரு நிமிடம் கண்ணைமூடி
ஆவல் கொண்டான்
அப்போது
"மக்கள் இனிமேல் சுகமாய் வாழ்வார்கள்"
"மக்களுக்குப் பூரண சுதந்திரம் அளிக்கப்படும்"
இளைஞர் இருவர் பேப்பர் செய்தியை உரத்துப்படித்தனர்
அவன் நிமிர்ந்து ஆலமரத்தைப் பார்த்தான்

ஆலம் விழுதுகள் அவனை வளைப்பது போலே இருந்தன
விவசாயி மெல்லஎழுந்து நடந்தான்
நடக்கும் போதொரு புதிய நினைப்பு

4

புதிய நினைவுடன் வீதியில் நடந்தான்
தலையோ சுற்றி அவனைச் சாய்த்தது
என்றாலும்
ஒருவாறதனைச் சமாளித்தவனும்
மெல்ல மெல்ல அசைந்து அசைந்து சென்றான்
பச்சிலைத் தளிர்களை வளர்த்த அவனுடல்
எச்சிலை விழுங்கித் துவண்டு விழுவதைக் கண்டன
பச்சிலைத்தளிர்கள் மெல்ல அழுதன
சில வளர்ந்த மரங்கள் மெல்ல ஆடிக்கொண்டன
கொஞ்சம் கொஞ்சம் நடந்து சென்றால்,.........
இனிமேல் அவனும் விழுந்து விடுவான்,
அப்போது,
''ஏழைகள் வாழ்வு மலரும்
புதுத்திட்டங்கள் அரசு ஆக்கும்''
யாரோ ஒருவர் சொல்லிச் சென்றார்
விவசாயி மெல்லத் தவழ்ந்து சென்றான்
தவழும் போதொரு புதிய நினைப்பு

5

மீண்டும்,
வயலின் வரம்பில் ஊர்ந்து சென்றான்
வளர்ந்த பயிர்கள் எழுந்து நின்றன
சில வாடி மண்ணை முத்தமிட்டன
சில முத்துத்தன்னிச் சிரித்து நின்றன
மெல்லக் காலை அதனுள் வைத்து,
கண்ணில் கண்ட களையைப் பிடுங்கினன்
அப்போது,
நாளை நடைபெறும் கூட்டத்திற்காய்,
மேடைக் குரலில் ஒருவர் கத்தும்
சிலேடைக் குரல்கள் காதில் நுழைய,
முகத்தைச் சுழித்து எதுவும் புரியா,
நிலையில் நடந்து வீதியில் ஏறி,
காற்றில் தவழ்ந்து ஓடிவரும்
ஒலியைக் கேட்டான்,

அதில்,
''எங்களின் நன்மைக்காக
எங்களின் உரிமைக்காக
வைத்தி அவர்களை
ஆதரித்து, நாளை நடைபெறும் கூட்டத்திற்காய்,
வேளைக்கே வர அழைப்புக்கள் விடுத்தோம்''
என்றே இருந்தது கேட்டு
மீண்டும்,
விவசாயி மெல்ல எழுந்து நடந்தான்
நடக்கும் போதொரு புதிய நினைப்பு

6

புதிய நினைவுடன் வீட்டுக்குள்ளே,
புகுந்த அவனின் கண்களின் முன்னே
சுருண்டு துடிக்கும் மனைவியின் தோற்றம்
பசியால்,
இருண்ட கண்களில் இருண்டு தெரிகிறது
ஓடிச்சென்று அவளை அணைத்தான்
நீருக்காக அவளும் துடித்தாள்
பசியால் துடித்த பச்சை உடம்பு
துடியாய்த்துடித்து மண்ணில் புரண்டது.
அவனும்
நீரைஅள்ளி முகத்தில் தெளித்து,
வாயில் சிறிது வலிந்து செலுத்த,
வீதியின் வழியே........
ஏழைகள் தொண்டன் வாழ்க என்றும்
போடுபுள்ளடி என்றும் சொல்லி
ஏகப்பட்ட சொந்தொடர் கூட்டம்
ஊர்வலமொன்றில் கேட்கிறது
மெல்ல எழுந்து வெளியே வந்து
அதைப்பார்த்து அழுது உள்ளே சென்றான்

7

அவளோ நிலத்தில் புரண்டழுதாள்
அவனோ புரியாதெதுவும் அழுதான்
அழுதான் அழுதான் அவளுக்காக அழுதான்
அப்போதும்,
ஒருசில பேர்கள் அங்கே வந்து

அவன் வோட்டுக் கேட்டுச் சென்றனர்
அவர்கள் போனபின்பு
அவளின் அருகில் வந்தழுதான்
அழுது அழுது கண்ணில் இருந்து
வடிந்த கண்ணீர் நின்றுவிட்டது
அப்போதவனும் இறந்தாள்
இந்நேரம்,
''வெற்றி வெற்றி'' என்று சொல்லி
கூட்டம் ஒன்று சென்றது

8

வற்றிய கண்களில்
இனிமேல்
வருவது பொறிதான்
அவனைப் போலே பலபேருண்டு
பொறிகள் கக்கிப் பொங்குவர்
என்றாலும்
இனிப் பொறுக்கார்; எழுவர்?
ஒருநாள்,
''உரிமைக்கான போரைத்துவங்க இயக்கமாகுவோம்''
எல்லார் நெஞ்சும் இதனை உரைத்தது
''ஓட்டுப்போடோம்''
எல்லார் நெஞ்சும் இதனை உரைத்தது
''நானை என்றொரு உலகைச் சமைக்க நாங்கள் புறப்படுவோம்''
எல்லார் நெஞ்சும் இதனை உரைத்தது
இப்போ,
விவசாயி எழுந்து மெல்ல நடந்தான்
நடக்கும் போதொரு புதிய எழுச்சி

— முற்றும் —

எமது நிருபர்கள் சந்தித்த சாதாரண மக்கள் (அணுகுண்டு சோதனையைப் பற்றி) அவ்வளவாக அக்கறை காட்டவில்லை. மாறாக இவ்விஞ்ஞான நுண்ணறிவு இன்றைய நாளுக்கு நாள் வளரும் பிரச்சனைகளான உணவு, குடியிருப்பு, உடை ஆகியவற்றை தீர்ப்பதில் எவ்வாறு உதவமுடியும் என்று கேட்டார்கள்.

— ஸ்டாண்டட் மதறாஸ் 19-5-74

## தொடங்கட்டும்......!

உற்பத்தி யந்திரத்தின்
அச்சாணி சக்திகள் நாம்
உழைப்பவரே இந்நாட்டின்
முதுகெலும்பு; சொல்லுகிறோம்
வீடுகளாம் உயர் மாடிகளாம்
காருகளாம் கவின்தோப்புகளாம்
இத்தனையும் தந்தவர்கள்
நாங்களன்றோ!
இத்தனையும் தந்து மிங்கு
இன்பமென்று சொல்லுவதற்கு
என்ன கண்டோம்
பீடுகளை இழந்தோம்
பிரிவுற்று நலிந்தோம்
இளமைகளை வசந்தங்களை
எத்தனையோ இன்பங்களை
உங்களுக்காய் பலியிட்டோம்
— இன்னும்

உங்களது அதிகாரம்
வெளிவரும் துப்பாக்கி
குண்டுகளால், எங்களது
தோழர்களை தோழியரை
தொழிலாள வீரர்களை
இழந்து விட்டோம்
சாவணைத்த தோழர்கட்கு
சாத்வீக ஊர்வலங்கள்
ஓலங்கள் ஒப்பாரிகள்
இவையன்றோ இற்றைவரை
யாம் கண்ட வழிவகைகள்
இவையனைத்தும்இனிவேண்டாம்
செங்குருதிக்கு குருதி தான்
இதுவே நாம் கற்ற
நற்பெரும் பாடங்கள்
ஆனதினல்; தோழர்களே!
நமதுரிமை பலிகொண்ட
நாய் மகனும் துரைவர்க்க
கருவறுக்க
தொழிலாள விவசாய
அணிசேர்த்து
தொடங்கிடுவோம் நம் பயணம்
தொடங்கட்டும் யுகப் புரட்சி!

—மாத்தளை இராஜலிங்கம்

## உற்பத்தி பெருகிட..

வாழைக்கிணற்றடியில்
வாட்டர்பம் இறைக்கிறது
ஊரார் கூடிநின்று
உன்னிப்பாய் பார்க்கிறார்கள்
கிணற்றடியில் ஏதோவென்று
கிட்ட நான் ஓடிப்போனேன்
அதிசயம் என்னவென்றல்
அங்கே புதிய ஒரு 'அல்கன்' பம்
புதிய 'அல்கன்' பம்மோ?
புதுப்பிக்கப்பட்ட பம்மோ?
பூர்ந்து பார்த்தாலே
புரிந்து கொள்வார்
இத்தனைக்கும் இவரிடமும்
இருக்கிறது வாட்டர்பம்
ஆனாலும் அவையெலாம்
ஆயுட்காலம் தாண்டியவை
புத்துயிர் ஊட்டினலும்
பத்துப்பட்டி இறைக்காதாம்
உற்பத்தி பெருகவேணும்
ஊருராய்ச் சொல்லுகிறர்
உற்பத்தி சாதனங்கள்
உழுபவர்க்கு கிடைக்கிறதோ?
உற்பத்திச் சாதனங்கள்
உழைப்பவர்க்குச்சொந்தமென்ற
பொற்காலம் வந்திடாமல்
பெருகிடுமா உற்பத்தி!

— ஞானசிவம்

★ சிறுகதை

# பாவங்களுமில்லை சனியன்களுமில்லை

— என். சண்முகரத்தினம் —

அசோகன் எனக்கு இஷ்டமில்லாத ஒன்றைச் செய்யும்படி வேண்டிக்கொண்டான். நீண்டகால நண்பனுகையால் தன் குடும்ப விஷயங்கள் பற்றி என்னுடன் வெளிப்படையாகவே கதைக்கும் அசோகன் அன்று ஒரு பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தான்.

"என்னுல் திரேசாவின் மனதை மாற்ற முடியவில்லை. அவ எப்பிடியும் அமெரிக்காவுக்குப் போய்விடுவதே நல்லது என்கிருள். நமக்கும் குழந்தைகளுக்கும் இங்கை எதிர்காலம் இல்லை என்ற காரணத்தைத் தான் முக்கியமாய் கூறுகிருள். ஆனுல் எனக்கெண்டால் உண்மையிலேயே வெளிநாட்டில் போய் தொழில் பார்ப்பதை விட கஷ்டப்பட்டாலும் இங்கேயே இருந்துவிடத்தான் விருப்பம். உனக்குத் திரேசா நிறைய மதிப்பு வைச்சிருக்கிருள். நீ ஒருக்கா சொல்லிப் பார்த்தால் என்ன?"

அசோகன் ஒரு என்ஜினியர். இந்து மதத்தைச் சேர்ந்த அவன் கிறிஸ்துவப் பெண்ணுன திரேசாவைக் கல்யாணம் செய்து கொண்டான். திரேசாவுக்காக அவன் மதம்கூட மாறிக்கொண்டான். திரேசாவின் வீட்டாரின் முழு ஆதரவுடனும் அசோகன் வீட்டாரின் முழு மூச்சான எதிப்பின் மத்தியிலும் அவர்கள் கல்யாணம் நடைபெற்றது. அவர்களின் கல்யாணத்துக்கு ஆதரவு கொடுத்த அசோகனின் நண்பர்களில் நானும் ஒருவனுயிருந்தது, அவர்களின் குடும்பத்தோடு எனக்கு ஒருவிதமான பிணைப்பை ஏற்படுத்தி இருந்தது. அதைவிட முக்கியமான தென்னவென்ருல் பொதுவாகத் தன்னம்பிக்கையும், துணிவும் குறைவாயிருக்கும் அசோகனுக்கு அவற்றை ஊட்டும் ஒரு சகபாடியாக நானிருந்தேன்.

"உன்ரை ஆதரவும் புத்திமதியும் எனது கல்யாண நேரத்தில் எனக்குத் துணிவைத் தந்தன. அந்தத் துணிவில்லாவிட்டால் நான் திரேசாவைக்கட்டி இருப்பனே தெரியாது". எட்டு வருடங்களுக்குமுன் தனது கல்யாணத்திற்குப் பின் அசோகன் என்னிடம் கூறிய வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. இன்று அவ

னுக்கு ஏழு வயதிலும் நாலு வயதிலும் இரண்டு ஆண் குழந்தைகள். ஆனல் அசோகனுக்காக நான் பலதடவை பரிதாபப்பட்டிருக்கிறேன். கல்யாணமானபின் அவனைத் திரேசா தன் கைப் பொம்மையாக்கி விட்டாள். இத்தனைக்கும் அவள் அவனைவிட படிப்பிலும் உலக அறிவிலும் குறைந்தவளாகவே இருந்தாள்.

''எல்லா வகையிலும் திரேசாதான் எனக்கேற்றவளெண்டு தெரியுது. அவளைவிட வேறு யாரும் எனக்கு வேண்டாம். ஆனல் என்ரை ஐயா, அம்மா சொந்தக்காரங்களுக்குத்தான் பிடிக்கேல்லை. சமயம் வித்தியாசம் சாதி வித்தியாசம் எண்டு சொல்லினம்''.

இப்படி அசோகன் கூறிய போது நான் அவனுக்கு ஆதரவு கொடுப்பதில் தவறில்லை என்றே எண்ணினேன். ஆனல் திரேசா பற்றிய அசோகனின் மதிப்பீடு அவ்வளவு சரியாகவிருக்கவில்லை என்பதை பின்புதான் அறிய முடிந்தது. அசோகன் முதன் முதலில் கடமையாற்றிய அலுவலகத்தின் பிரதம லிகிதரின் மகள்தான் திரேசா. இரத்மலானையில் இருந்த அலுவலகத்திற்குச் சமீபத்திலேயே பிரதம லிகிதர் சவரிமுத்து வசித்து வந்தார். இதனல் அசோகன் தன் மத்தியான உணவை அவர் வீட்டில் வைத்துக் கொண்டான். அப்போது காதல் ஏற்பட்டு ஒரு வருடத்துக்குள் கல்யாணமும் நடைபெற்றது. சென்ற இரண்டு மூன்று வருடங்களாக நம்மைப் போன்ற பலர் அமெரிக்காவுக்கும், ஐரோப்பாவுக்கும், அவுஸ்திரேலியாவுக்கும் 'நல்ல மேய்ச்சல் நிலங்களைத்தேடி' ஓடிக்கொண்டிருக்கிறுர்கள். திரேசாவின் நிர்ப்பந்தத்தினல் அசோகனும் அமெரிக்காவுக்கு உத்தியோகம் தேடி மனுப்போட்டிருந்தது எனக்குத் தெரியும்.

''நீங்களும் அப்பிளை பண்ணுங்கோவன்'' என திரேசா என்னை வற்புறுத்தினள்.

''நான் இங்குதான் இருக்கப் போகிறேன். எங்களைப் போன்ற நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த சிலர் வெளிநாடுகளுக்கு ஓடிப் போவதால் தம் பிரச்சினைகளைத் தீர்க்கப்பார்க்கினம். ஆனல் அது நிரந்தரமான வழியில்லை'',

''என்ன அப்பிடிச் சொல்லு நீங்கள். என்ரை ப்ரன்ட் மனோவின்ரை ஹஸ்பண்டிற்கு அங்கே ஆயிரம் டொலர் சலறி. அதைச் சிலோன் காசிலை மாத்தினல் பத்தாயிரம் ரூபாய். இப்ப அசோகனுக்குக் கிடைக்கிற சம்பளத்தையும் விடப் பத்து மடங்கு.

அமெரிக்காவின் வாழ்க்கைச் செலவும், அதற்கேற்றபடி அதிகமென்பதையும் அங்கே போய்ப் பல சமூகப் பிரச்சினைகளுக்கு ஆளாகவேண்டும்-அதுவும் நிறப் பிரச்சினை பெரும்பிரச்சினை என்பதையும் நான் விளக்க முற்பட்டேன். ஆனல் திரேசா தன் சிநேகிதியின் கடிதங்களை ஆதா

ரம் காட்டி என்னை எதிர்த்துப் பேசினான்.

''என்னுடைய நண்பர்கள் பலர் அமெரிக்காவில் இருக்கிறார்கள். உங்களின்ரை மனைவியிலும் பார்க்க பரந்த ஆழ்ந்த கண்ணோட்டமுள்ளவை. அவங்கள் எனக்கு எழுதியிருக்கிற பெருந்தொகையான கடிதங்களைப் படித்தபின்தான் நானும் கதைக்கிறேன்'' நான் எவ்வளவு சொன்னாலும் திரேசா கேட்பதாயில்லை. மீண்டும் ஒருதடவை போய்ச் சொல்வதால் பயன் உண்டா?

மறுநாள் மாலை அசோகன் வீட்டிற்குப்போனேன். வெளியே முற்றத்தில் அசோகன் தன் இரு குழந்தைகளுடனும் பந்து எறிந்து விளையாடிக் கொண்டிருந்தான். என்னைக் கண்டதும் அவனும் குழந்தைகளும் ஒன்றாக வரவேற்றனர். வீட்டிற்குள் நுழைந்தபோது திரேசா றேடியோவுக்கருகில் அமர்ந்திருந்து மேல் நாட்டிசையை ரசித்துக் கொண்டிருந்தாள். நவீன கொண்டையணிந்து, பர்மிய 'பட்டிக்' உடையில் காட்சியளித்த திரேசாவைப் பார்த்ததும் பத்திரிகைகளின் அட்டைப்படங்களில் தோன்றும் நடிகைகளின் நினைவு வந்தது.

''ஹலோ மூர்த்தி, வாங்கோ வாங்கோ..... கனகாலத்துக்குப் பிறகு... இருங்கோ'' என என்னை உபசரித்த திரேசா தேனீருக்கு ஓடர் கொடுக்கக் குசினிப் பக்கம் போய்விட்டு வந்து அமர்ந்தாள். அவள் குசினிப் பக்கம் போயிருந்த சில விநாடிகளுக்குள் அசோகன் என்னிடம் ''அமெரிக்காவிலையிருந்து வேலை கிடைச்சுக் கடிதம் வந்ததிலிருந்து திரேசாவுக்கு ஒரே சந்தோஷம். ஆளைப்பிடிக்கேலாது'' என்றான்.

''மூர்த்திக்குச் சொன்னீங்களா வெட்டரைப்பற்றி. அவருக்குத்தான் இது பிடிக்காத விஷயம். எண்டாலும் எண்டைக்கோ ஒருநாள் அவரும் இந்த முடிவுக்குத்தான் வருவார். கதையை எப்படி ஆரம்பிப்பதென்று சிந்தித்துக் கொண்டிருந்த எனக்கு அவள் சிரமத்தைக் கொடுக்கவில்லை.

''திரேசா, அமெரிக்காவுக்குப் போறதிலை அசோகனுக்கு முழு விருப்பம் இல்லைப் போலை கிடக்கு''

''அவருக்குப் பைத்தியம். வலிய வாற சிதேவியை உதறப் பார்க்கிறார். மூர்த்தி உங்களுக்குத்தானே தெரியும் எங்களிட்டை ஒரு சொத்துமில்லை. இங்கையிருந்தால் கடைசிமட்டும் இப்படித்தானிருப்பம். இப்ப பாருங்கோ காரிலை வெளியிலை போறதேயில்லை பெட்ரோல் விலையாலை, கிழமைக்கொருதரமெண்டாலும் ஆசைக்கொரு படம் பார்க்க முடியாது. எல்லாச் சாமானும் விலை. ஏன் ஒரு கேட்டின் துணி கூட வாங்க முடியாது. இதுவும் ஒரு நாடா? நாலைஞ்சு வருஷத்துக்கு முந்தி இவ்வளவு மோசமில்லை. இப்ப

படுமோசம். எனக்கு இங்கை ஒரு நிமிஷம்கூட இருக்க ஆசையில்லை.''

''உதைத்தான் சொல்லுறது நடுத்தர வர்க்கக் குணமெண்டு. அசோகன் எண்ட என்ஜினியரின்ரை பெண்சாதி எண்டபடியாலே, இப்பிடிக் கதைக்க முடியுது. இதே அசோகன் ஒரு சிறிய உத்தியோகத்தனாக இருந்தால் உப்பிடி ஆசையாய் இருந்தாலும் சொல்லியிருக்க மாட்டியள். ஒண்டு சொல்லுறன், அமெரிக்க வாழ்க்கை வசதியுள்ளதாயிருக்கலாம். ஆனால் இங்கையிருக்கிற அளவு அமைதி அங்கை போனால் இருக்காது. உங்களின்ரை பிரச்சினை அடுத்தநேர உணவைப் பற்றியில்லை. இருக்கிற காரைப் பாவிக்கிறதுக்குப் பெட்ரோலில்லை-கிழமைக்கொரு பல்கனியிலையிருந்து படம்பார்க்க காசு காணாது எண்டதுதானே. உங்களுக்குத் தெரியுமா ஒரு நேரச் சாப்பாட்டுக்கு வழியில்லாமல் சனங்கள் படுறபாடு. எங்களின்ரை வேலைத்தலங்களிலையெல்லாம் சாப்பாடில்லாமல் வேலையாக்கள் வேலையே செய்ய மறுக்கினுங்கள்''.

''நீ சொல்லத்தான் நினைவுக்கு வருகுது, மூர்த்தி இண்டைக்கு என்னுடைய வேலைத்தலம் ஒண்டிலை வேலைமுடிய இரண்டு மணித்தியாலங்கள் முந்தியே எல்லாரும் நிற்பாட்டிப் போட்டினம்.'' ரெக்னிக்கல் அஸிஸ்டெண்ட் போய்க் கேட்டதுக்கு வேலை செய்ய ஏலாது-சாப்பாடு இல்லை எண்டாங்களாம். போனகிழமை வேலையை வேளைக்கு நிற்பாட்டினதுக்கு சம்பளத்தை வெட்டிப் போட்டான் ஒரு ரெக்னிக்கல் அசிஸ்டெண்ட் அவனுக்கு எல்லாருமாகச் சேர்ந்து அடிச்சு இன்னும் ஆஸ்பத்திரியிலை அவன். எனக்கெண்டால் ஆற்றை சம்பளத்தையும் வெட்ட விருப்பமில்லை. அவங்களும் பாவங்கள் சாப்பாட்டுக்குக் கஷ்டம் வேலை செய்ய சக்தி இல்லை'' அசோகன் தொழிலாளர்களைப் பாவங்கள் எனக் குறிப்பிட்டது திரேசாவுக்குப் பிடிக்கவில்லைப் போலும்.

''அந்தச் சனியன்களாலை தானே இப்பிடி எல்லாம் வந்தது. வேலை செய்ய மாட்டாங்கள். சண்டைக்கு வந்திடுவாங்கள். இப்ப வரவர மோசம். இங்கை நாங்கள் இருக்கிறதாலை என்ன நன்மை. இலங்கை ஆக்கள் எரிச்சல், பொறாமைக்காரர். கொஞ்சம் நல்லாயிருந்தால் மற்றவைக்குப் பொறுக்காது''. திரேசா தொழிலாளர்களைச் சனியன்கள் என்று குறிப்பிட்டது எனக்குப் பிடிக்கவில்லை. ''திரேசா வேலை செய்யிறவர்களை சனியன்கள் எண்டு எப்பிடிச் சொல்ல மனம் வந்தது? எங்களுக்கு அத்தியாவசியத் தேவைகளைவிட ஆடம்பரமான பொருட்களுக்கும் பொழுது போக்குக்கும் காசு காணாது எண்ட பிரச்சனை அவங்களுக்கு ஒரு நேரச் சோத்துக்குப் பிரச்சனை''.

''அது அவங்கடை தலைவிதி. அவங்களுக்குப் பத்தாது. மூண்டு நாலு வருஷங்களுக்கு முந்தி உவைதானே பெரிய கூத்துகள் ஆடியவை. இப்ப படுகினம், பத்தாது''. திரேசாவை மாற்ற முடியும் என நான் நம்பவில்லை. செவிட்டுக் காதுகளில் சங்கு ஊதி என்ன பயன்?

கொஞ்ச நேரம் வேறு கதைகளைக் கதைத்து விட்டு விடை பெற்றுக் கொண்டேன். ஒரு வாரம் கழிந்தது. அன்றுமாலை அசோகன் என் வீட்டிற்கு வந்தான். அவர்கள் அமெரிக்கா போகக் கூடும் என என் மனைவியிடமும் கூறியிருந்தேன். அசோகனைக் கண்டதும் அவள் கேட்டாள்.

''என்ன அமெரிக்காவுக்குப் போறீங்களாம். எப்ப போறீங்கள்'' அசோகன் ஏதோ சமாளிக்க முயன்றான்.

''ஓ, போனாலும் போவம்'' என்றவன் பத்மா உள்ளே போனதும் ''மூர்த்தி நாங்கள் அடுத்த மாதம் முதலாம் திகதி போறதுக்கு எல்லா ஆயத்தமும் செய்யிறம். திரேசா பிடிவாதமாகப் போய்த்தான் ஆகவேண்டுமெண்டு நிற்கிறதாலைதான் போகச் சம்மதிச்சன்''

சில நிமிடங்கள் யாரும் பேசவில்லை. மீண்டும் அசோகன் தான் பேசினான். ''நாங்கள் போறதுக்கிடையிலை எல்லாருமாய் இங்கை வருவம். உண்மையிலை அங்கை போறது இன்னும் எனக்கு விருப்பமில்லை. என்டாலும் தவிர்க்க முடியாது. திரேசாவும் பணக்காரியில்லை நானும் பணக்காரனில்லை. இங்கையிருந்து உய்யவும் வழியில்லை. திரேசா சொல்லுறதிலையும் நியாயம் இருக்கு.''

''அசோகன், நான் கூடக் காதல் கல்யாணம் செய்து கொண்டேன். பத்மா சீதனமும் கொண்டு வரேல்லை. என்னட்டையும் சொத்துக்கள் இல்லை. ஒரு பெம்பிளைப்பிள்ளையும் இருக்கு. எண்டாலும் நானும் பத்மாவும் சந்தோஷமாய் சீவிக்கிறம் தானே.''

பத்மா தேநீர் கொண்டு வந்து வைத்துவிட்டு என்னருகில் அமர்ந்து கொண்டாள். ''பத்மா, அசோகனும் குடும்பமும் அடுத்தமாதம் அமெரிக்காவுக்குப் போகினம்''

''அப்பிடியா! என்ன இவ்வளவு கெதியாய். திரேசாவுக்கு முந்திக்கூடி ஆசைதானே அமெரிக்கா போக. இப்ப சந்தோஷப்படுவா எண்டு நம்புறன்.

அசோகன் என்னிடமிருந்து எதையோ எதிர்பார்ப்பதுபோல் என் வாயையேபார்த்துக்கொண்டிருந்தான். ''அசோகன் எங்களைப் போலை ஆக்கள் இப்பிடியான நிலைமையளிலை இருந்து தப்பியோடப் பார்க்கினம். பட்டம் பெற்றிருக்கிறது அவைக்கு வாய்ப்பாயிருக்கு. எண்டாலும் இந்தப்படிப்பு எங்களிலை பல

ரைக் கோழையாக்கிப் போட்டுதே எண்டதுதான் கவலைக்கிடமானது. உன்னைப்போலை ஆக்கள் இங்கை இருந்து தப்பி ஒடுற மாதிரி அங்கை போன பிறகும் அங்கையும் ஒத்துவராட்டி எங்கையாவது ஒட வேண்டி வரும்''

''நீங்கள், அவரை ஏன் குழப்புறீங்கள்'' பத்மா குறுக்கிட்டாள்.

''இல்லை, இல்லை மூர்த்தி சொல்றதிலை சரி இருக்கு''என்று என்னைத் தொடர்ந்தும் பேச வைத்தான் அசோகன்.

''நீங்கள் எல்லாம் தப்பி ஓடி விடுவியள், ஆனால் எப்பிடியும் இங்கைதான் இருந்தே ஆக வேணும் எண்ட நிலைதான் நூற்றுக்குத் தொண்ணூறு வீதமான ஆக்களுக்கு. அவையளின்ரை வாழ்வோ சாவோ இரண்டும் இங்கைதான். அவங்கள் தாங்கள் வாழுறதுக்காக புதியதொரு சமுகத்தை ஆக்காமல் விடமாட்டாங்கள். நானும் அவங்களோடை சேர்ந்து கொள்ளவே விரும்புகிறேன். அந்த நம்பிக்கைதான் என்னை வெளிநாட்டுக்குத் தொழில் தேடிப் போக வைக்கவில்லை.

★ ★ ★

''இன்றைய உலகில் யாரை யார் போஷிக்கிறார்கள்?'' என்ற கேள்விக்கான விடை அண்மையில் அராபிய நாடுகள் எண்ணெயை ஆயுதமாக பிரயோகித்த போது தெளிவாகியது. கடந்த காலங்களில் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் உள்ள மக்கள் உயிர் வாழ்வதற்குக் காரணமே தாங்கள்தான் என்று ஏகாதிபத்திய நாடுகள் பீத்திக் கொண்டன. தாம் கருணை கூர்ந்து அளிக்கும் ''உதவி'' இல்லாமல் வளர்ச்சியடைந்து வரும் நாட்டின் மக்கள் ஒரு நாள் கூட உயிர்வாழ முடியாது என்று மார்தட்டின. இப்பொழுது எண்ணெயினால் இவர்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியிலிருந்து ஒன்று தெளிவாகிறது. மற்றைய நாடுகளை அடிமையாக்காமல் அவற்றைச் சுரண்டாமல் ஏகாதிபத்தியம் ஒரு நாள் கூட உயிர்வாழ முடியாது. உண்மையில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலுள்ள மக்களின் இரத்தத்தில் வாழும் ஒட்டுண்ணிகளே ஏகாதிபத்தியவாதிகளாவர். மூன்றாம் உலக நாடுகளை சுரண்டுவதிலும் சூறையாடுவதிலும் இருந்துதான் ஏகாதிபத்திய நாடுகளின் செல்வமும் செல்வாக்கும் ஏற்படுகிறது.

# வடக்கில் ஒரு
# பல்கலைக் கழகம்

—பரமன்

வட பகுதிக்கு ஒரு பல்கலைக் கழகம் வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக பல்வேறுபட்ட அரசியல், கல்வி, சமூக ஸ்தாபனங்களால் முன்வைக்கப் பட்டுவந்த ஒரு விஷயமாகும். இவ் ஸ்தாபனங்களும் அதன் தலைவர்களும் பெயரளவிலான ஒரு பல்கலைக்கழகத்தை வேண்டி நின்ற போதிலும் அவர்களது நோக்கங்கள் வெவ்வேறானவை என்பது தெட்டத் தெளிவானது. வடக்கில் அமையும் பல்கலைக் கழகம் தமிழ் மாணவர்களுக்காக மட்டும் இருக்க வேண்டும் என்று சிலர் கூறுகிறார்கள். தமிழ், இந்து நாகரிகத்தை வளர்ப்பதற்கு இப் பல்கலைக் கழகம் உதவ வேண்டும் என்று இன்னொரு சாரார் விரும்புகின்றனர். வேறொரு பகுதியினர் தமிழ் மொழியையும், கலை கலாச்சாரத்தையும்பேணிப் பாதுகாக்கவும் இப் பல்கலைக்கழகம் செயல்படவேண்டும் என்று கூறுகிறார்கள். உண்மையில், இவர்கள் எல்லோரும் ஒரு நாட்டின் பல்கலைக் கழகம் எவ்விதமாக அமைந்து, எத்தகைய வழிகளில் செயல்பட்டு; நாட்டுக்கு பயன்பட வேண்டும் என்பதில் சுத்த சூனியமாகவே உள்ளனர். வடக்கே பல்கலைக் கழகம் வேண்டும் என்று கோரியவர்களில் பெரும் பாலானவர்கள் தத்தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்கும், அல்லது சொந்த நலன்களைப் பேணுவதற்கும் தான் இப் பல்கலைக் கழகக் கோரிக்கையை முன் வைத்து வந்துள்ளனர். இவர்கள் எல்லோரும் தமிழ் மொழியையும், வட பகுதியையும் முழு இலங்கையிலும் இருந்து பிரித்து வேறாகப் பார்த்தே தமது கோரிக்கைகளை முன் வைத்தனர். உண்மையில் வடக்கில் பல்கலைக்கழகம் நிறுவுவதன் நோக்கம் தான் என்ன? பல்கலைக் கழகக் கட்டிடத்தைக் காட்டி கண் துடைப்புச் செய்யவா? அல்லது அங்கு வரும் அலுவலர்களைக் காட்டி அரசியல் வளர்க்கவா? இன்றுவரை பல்கலைக் கழகத்தின் நோக்கம் புரியாத புதிராகவே உள்ளது.

வடக்கில் ஒரு பல்கலைக் கழகம் என்னும் அடிப்படையில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள பரமேஸ்வராக் கல்லூரியை ஒரு பல்கலைக் கழக வளாகமாக திறப்பதற்கு வேலை

கள் நடைபெறுகின்றன. இவ் வளாகம் எப்படி இயங்கப் போகின்றது என்பது எல்லோரினதும் கேள்வியாகும். இவ்வேளை நாம் இலங்கையில் உள்ள ஏனைய வளாகங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைப் பார்ப்பது அவசியமாகும். பேராதனை வளாகத்தில் கலை, விஞ்ஞானப் பட்டதாரிப் படிப்புகளும், பொறியியல், மருத்துவம், பல்வைத்தியம், விவசாயம், மிருக வைத்தியம் ஆகியவையும் போதிக்கப்படுகின்றன. (இவற்றுள் பொறியியல், பல் வைத்தியம், விவசாயம், மிருக வைத்தியம் முதலியன ஏனைய வளாகங்களில் கற்பிக்கப்படுவதில்லை). பொறியியல் படிப்பதற்கு அங்குள்ள பரிசோதனைக் கூட வசதியும். இலங்கையில் உள்ள சிறப்பான பல் வைத்தியசாலை பேராதனையில் இருப்பதும், விவசாயத் திணைக்களம், பேராதனைப் பூங்கா ஆகியவை அமைந்திருப்பதும் இவற்றுக்குக் காரணமாகும். இவ் வசதிகள் மற்றைய வளாகங்களில் இல்லை. எனவே இத் துறைகள் பேராதனை வளாகத்திற்குச் சிறப்பாக உள்ளன. இதனால் இத் துறைகளில் ஆராய்ச்சி செய்வதற்கான வசதிகளும் அதிகமாகவே உள்ளன.

கொழும்பு வளாகத்திலே கலை, விஞ்ஞான பட்டதாரிப் படிப்புகளும் வைத்தியமும் போதிக்கின்றார்கள். அத்துடன் திட்டமிடல், அபிவிருத்திக் கல்வி, நகர்தோர் நடைமுறை ஆகியவையும் கற்பிக்கப்படுகின்றன. கொழும்பு நகரத்தில் உள்ள அலுவலகங்களை நேரே பார்த்து நகர்தோர் நடைமுறைகளைப் படிப்பதும், திட்டங்கள் யாவும் கொழும்பில் இருந்து ஆக்கப்படுவதால் அவற்றுடன் தொடர்பு கொள்வது சுலபமாகையால் இவ்வளாகம் கொழும்பில் அமைந்துள்ளது.

வித்தியாலங்கார வளாகத்தில் கலை பட்டதாரிப் படிப்புகளும் விஷேசமாக கலாச்சாரம், மொழியியல், மானிடஇயல் போன்றன கற்பிக்கப்படுகின்றன.

வித்தியோதய வளாகத்தில் விஞ்ஞானமும், விஞ்ஞான நுட்பங்களும், வர்த்தகவியலும் முகாமைக் கல்வியும் கற்பிக்கப்படுகின்றன. கட்டுபத்தை வளாகத்திலே பொறியியல் நுட்பங்களும், கைத்தொழில் வளர்ச்சிக்கான பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. இங்கு பிரயோக விஞ்ஞானம் சிறப்பிடம் பெறுகின்றது.

இந்த ஐந்து வளாகங்களில் கற்பிக்கப்படுவனவற்றை தொகுத்துப் பார்த்தால் அவற்றுள் பொதுவாக கலை, விஞ்ஞான பட்டதாரிப் படிப்புகளும் அதே வேளை ஒவ்வொரு வளாகத்திற்கும் சிறப்பாக சில வகுப்புகளும் நடாத்தப்படுவதை நாம் காண்கின்றோம். இவை குறிப்பிட்ட மதத்தினருக்கோ அல்லது குறிப்பிட்ட சமூகத்தினருக்கோ மட்டும் உரியனவல்ல, அனைவருக்கும் பொதுவானவையாகும்.

மேற்கூறிய ஐந்து பல்கலைக் கழக வளாகங்களில் கற்பிக்கப் படும், கல்வி முறைகளும், ஆரா ச்சிகளும், அல்லது அவை வழங் கும் பட்டங்களும் நாட்டின் பொருளாதார, அரசியல், கல்வி, கலாச்சாரத் துறைகளில் எத்த கைய அளவில் முன்னேற்றத் தைக் கொடுக்கின்றன என்பது கேள்விக்குரியதாக இருந்தபோதி லும் அல்லது ஒரு நாட்டிற்கு எவ் விதமான பல்கலைக் கழக அமைப்பு முறை வேண்டும் என் ற பிரச்சினையை வேறொரு கட் டுரையில் ஆராய்வது நன்று.

ஆனல் நடைமுறையில் இயங் கும் பல்கலைக் கழக வளாகங்கள் அமைந்திருப்பதற்கு கூறப்படும் சிறப்பு அம்சங்கள் போன்று வட பகுதியிலும் அமைய இருக்கும் வளாகத்திற்கும் சிறப்பியல்பு உண்டு. அது எவ்வளவு தூரம் பூர ணமாகப் பயன்படுத்தப்படுமா? என்பது நம்மால் கூற முடியா விட்டாலும் அச் சிறப்பை நாம் கூறிவைப்பது அவசியம். இல ங்கை கடலால் சூழப்பட்ட ஒரு திவு. மீன் வளம் நிறைந்த பகு திகள் இலங்கையைச் சுற்றி உள் ளன. ஆனல் இம் மீன்வளத்தை நமது நாடு எவ்வளவுக்குப் பயன் படுத்துகின்றது என்பது கேள் விக்கான விஷயம். அதே வேளை வடபகுதி விஷேசமாக யாழ்ப் பாணம் ஒரு குடா நாடு. கட லில் வாழும் மீன் இனங்களைப் பற்றியும், உயிரினங்களைப் பற்றி யும் படிப்பதற்கும், ஆராச்சிகள் செய்வதற்கும் ஏற்ற சகல வசதி களும் உண்டு.

மேலும் யாழ்ப்பாணம் நீர்ப் பிரச்சினை உள்ள பகுதி. அதே வேளை உவர் நீர் நிலைகள் அநேகம் உள்ள பகுதியும் கூட. இந்நீர் நிலைகளை அண்மித்த பகு திகள் எவ்வித உற்பத்திக்கும் ஏற்ற நிலங்களாகஇல்லை. எனவே இவற்றை நல்ல உற்பத்திக்கான நிலங்களாக மாற்றுவதற்கான ஆராய்ச்சிகளைச் செய்வது அவசி யம். இவ் ஆராய்ச்சி யாழ்ப் பாண வளாகத்தில் அமைவது முற்றிலும் சாத்தியம்.

அத்துடன் வடபகுதி விவ சாய முறை நாட்டின் ஏனைய பகுதிகளைவிட வித்தியாசமான தாகும். எனவே அத்தகைய விவசாய முறையை மேலும் விரி வாக்குவதற்கான ஆராய்ச்சிகளை மட்டுமல்ல அவற்றை நடைமு றைப் படுத்தக் கூடிய பட்டதாரி களை உருவாக்குவதும் அவசிய மாகும். சிறு கைத்தொழில்க ளுக்கான வாய்ப்புகள் கூட வட பகுதியில் ஏராளமாக உள்ளன

எனவே இத்தேவைகளின் அடிப்படையில் வடபகுதி வளாகம் அமையுமானல் நாட்டிற்கும் மக்களுக்கும் பிரயோசனமாக இருக்கும்.

இவ்விதமாக அமையும் வளாகத்தில் இன அடிப்படையில் அல்லாமல் இத்துறைகளில் வல்லமைகொண்ட சகல மாணவர்களும் அனுமதிக்கப்படவேண்டும். அதுவே நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டிற்கும், தேசிய உணர்வுக்கும் வழி கோலுவனவற்றுள் ஒன்ருக அமையும்.

இதை விடுத்து வட பகுதியில் அமையும் வளாகம் தமிழ் மாணவர்களுக்கு ஒரு அகதிகள் முகாமகவோ, பழம் பெருமை பேசுவதற்கான ஒரு நூதனசாலையாகவோ அமையக் கூடாது. தமிழ் மக்களுக்கு ஒரு வெறும் கண்துடைப்பாகவோ அல்லது தத்தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்குப் பயன் படுத்தப் படுவதற்கு ஒரு பெயர்ப் பலகைப் பல்கலைக் கழகமாகவோ இருக்கக் கூடாது. நாட்டிற்கும் வடபகுதிக்கும் பலன்தரும் முழுமையான எவ்வித பாகுபாடும் அற்ற ஒரு பல்கலைக் கழக வளாகத்தையே மக்கள் வேண்டுகின்ருர்கள். மக்களது விருப்பம் நிறைவேறுமா?

---

கடந்த ஐந்து ஆண்டுகளாக இந்தியப் பல்கலைக் கழகங்களில் இருந்து வெளிவரும் நான்கு பட்டதாரிகளில் மூவருக்கு வேலை கிடைப்பதில்லை. இந்திய ஜனத்தொகையில் மூன்றில் இரண்டு பகுதியினர் கல்வி அறிவற்றவர்களாக உள்ளனர். அறுபது கோடி இந்திய மக்களில் இருபது கோடி மக்கள் வறுமை மட்டத்தின் கீழ் வாழ்கின்றனர். அண்மையில் உலக வங்கியிடம் இருந்து இந்தியா 140 கோடி டொலர்களைக் கடனகப் பெற்றது. அணுசக்தி திணைக்களத்தின் அறிக்கைப்படி 100 கோடி ரூபாவை அணு ஆயுத உற்பத்திக்கு இந்தியா செலவு செய்துள்ளது. இவ்விதம் மக்கள் பட்டினியால் வாட அணுக் குண்டு உற்பத்திக்கு கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்தநாடு ''புண்ணிய பாரதம்''தான்.

ஸ்டான்டட் மதராஸ்
19-5-74

அம்பலத்தாடிகளின்

# மலைகளை அகற்றிய மூடக்கிழவன்

★

(தாளலய கவிதை நாடகம்)

★

[மூடக்கிழவர் வருகிறார் — மண்வெட்டி தோழிலும் நார்ப்பெட்டி தலையிலுமாக வருகிறார்.]

மூடக்கிழவர்:
மூடன்......! மூடன்......!
மூடனும்...! நான் மூடனும்!
முன்பிருந்தே சொல்லுகினம்!
மூடன் என்றே என்னை இன்றும்
முன்பிருந்தே சொல்லுகினம்
மூடக்கிழவன் என்றே.
பள்ளிக்கூடம் போனதில்லை
படிப்பறிவும் ஏதும் இல்லை
புத்தகங்கள் பார்த்ததில்லை
புத்தியிலும் ஏறுதில்லை
சொல்லுகினம்! சொல்லுகினம்!
சொல்லுறவை செய்ததில்லை
கண்டபடி பேசுகினம்
கடிப்பதில்லை குரைக்கும் நாய்கள்
செயலிலே நான் காட்டிடுவேன்
செயற்கரிய செய்கைகளை

[மண்வெட்டியையும் நார்ப் பெட்டியையும் ஒருபக்கம் வைத்துவிட்டு உலாவியபடி சிந்திக்கிறார்]

வடமலையில் வீடெனக்கு
வீடென்ன சிறுகுடில்தான்
குடிலின் முன்னே நெடும்பாதை
நெடும்பாதை நேரில்லை,
நேராக்கிப் பார்த்திட்டால்
பார்த்திடவே தடுப்பதென்ன?
தடுப்பதென்ன? பெருமலைகள்
பெருமலைகள் பாதையிலே
பாதையிலே பெருமலைகள்
மலைகளை நாம் அகழ்ந்திடுவோம்
அகழ்ந்துவிட்டால்! அகற்றிவிட்டால்!
அகற்றிவிட்டால் நேராகும்
நேராகும் பாதை இது
பாதை இது நேராகும்
நேராகப் பார்த்திட்டால்
பார்வைக்குப் புலனாகும்
புலனானல் சென்றிடலாம்
சென்றிடலாம் நெடும்பயணம்
நெடும்பயணம் சென்றிடலாம்
உம்.. ... உம்......
இங்கிதற்கு என்ன செய்வேன்?
என்ன செய்வேன்? எங்குசெல்வேன்?
சென்றிடுவேன் ஊருக்குள்ளே
உழைப்பவரைச் சேர்த்திடுவேன்
சேர்த்துவிட்டால் அகற்றிடலாம்
அகற்றிடலாம் மலைகளைநாம்

[கிழவர் சுற்றுமுற்றும் பார்க்கிறார் — கூவி அழைக்கிறார்]

அன்புமிக்க தோழர்களே!
அன்புடனே அழைக்கின்றேன்
இங்குவாரும் இங்குவாரும்
இங்குவாரும் ஒன்றுசேரும்

[சிலர் மண்வெட்டி, கடப்பாரை, நார்ப்பெட்டி சகிதம் வந்து கூடுகிறார்கள்]

அன்பு மிக்க தோழர்களே!
இம்மலையை அகழ்ந்திடுவோம்

அகழ்ந்திடுவோம் அகற்றிடுவோம்
அகற்றிவிட்டால் நேராகும்
நேராகும் எம்பாதை
நேராகும் எம்பாதை

[கிழவர் மண்வெட்டியை எடுத்து மலையை வெட்டுகிறார்[
அகழ்ந்திடுவோம் அகழ்ந்திடுவோம்
அகற்றிடுவோம் மலைகளைநாம்

[வந்து கூடியவர்கள் கிழவருடன் சேர்ந்து கொள்கிறார்கள். சிலர் மலையை வெட்டுகிறார்கள், சிலர் சுமந்து சென்று மறுபுறம் கொட்டுகிறார்]

வேலை செய்வோர்: அகழ்ந்திடுவோம் அகழ்ந்திடுவோம்
அகற்றிடுவோம் மலைகளைநாம்

[விவேகி எனப் பெயர் பெற்றவர் அவ்வழியே வருகிறார்]

விவேகி: பார் முழுதும் சென்றவன் நான்
படிப்பறிவும் பெற்றவன் நான்
பொறி இயலும், புவிஇயலும்
போதிக்க வல்லவன் நான்
வீண் பேச்சு பேசமாட்டேன்
வீண் வேலை செய்ய மாட்டேன்
வீண்பொழுது போக்கமாட்டேன்

[அந்த மும்மரமாக வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருப்போரைப் பார்க்கிறார். அக்கறையுடன் நோக்குகிறார்.]

என்ன இது? உம்...... ஊம்......
என்ன இது? என்ன இது?
என்ன இந்த முட்டாள்கள்
என்ன வேலை செய்கிறார்கள்
சென்று பார்ப்போம் சென்று பார்ப்போம்
செய்வதென்ன மூடர்கள்

[வேலை செய்வோர்க்கு அருகில் சென்று கவனிக்கிறார்]
வேலையிலே மிகுகவனம்
விறுவிறுப்பாய் செய்கிறார்கள்
மலை அடியை வெட்டுகிறார்

மறுபுறத்தில் கொட்டுகிருர்
மூடர்கள் மூடர்கள்
மூடர்களே! மூடர்களே!
மலையை ஏன் தோண்டுகிறீர்?

மூடக்கிழவர்: விவேகமுள்ள பெரியவரே
வழியை இங்கே தடுக்கிறதே
வளர்ந்துவிட்ட இம்மலைகள்
மலைகளை நாம் அகற்றிவிட்டால்
வழியை ஏதும் தடுக்காது
அகழ்ந்திடுவோம் அகழ்ந்திடுவோம்
அகற்றிடுவோம் மலைகளை நாம்.

வேலைசெய்வோர்: அகழ்ந்திடுவோம் அகழ்ந்திடுவோம்
அகற்றிடுவோம் மலைகளை நாம்

விவேகி: முட்டாளே! முட்டாளே
படிப்பறியா முட்டாளே!
கொட்டுகின்ற மழைக்கேனும்
பள்ளியிலே ஒதுங்கவில்லை!
மலையைத் தோண்டி எறிவாராம்
நேர்ப்பாதை அமைப்பாராம்
அஃஅஃஆ ......அஃஅஃஆ......
ஏனப்பா? உன்தலையில்
ஏதேனும் இருக்கிறதோ?
அற்பர் சிலர் சேர்ந்திரோ
அகற்றிடவே பெருமலையை!
அஃஅஃஆ...... அஃஅஃஆ......

மூடக்கிழவர்: ஏனையா படித்தவரே!
ஏதுக்கையா வீண்பேச்சு?
எமக்குதவி செய்வதென்ருல்
எடும்ஐயா மண்வெட்டி
இல்லை என்ருல் இப்பொழுதே
இங்கிருந்தே போய்வாரும்

விவேகி: வீண்வேலை வீண்வேலை
விவேகமற்ற மடைவேலை
மூடர்களே! மூடர்களே
முடியாத வேலை இது
முடியாத வேலை இது

மூடக்கிழவர்: முடியாத என்று ஒன்று
முயற்சித்தால் இல்லை இங்கு
முடியாத என்று ஒன்று
முயற்சித்தால் இல்லை இங்கு

வேலைசெய்வோர்: அகழ்ந்திடுவோம் அகழ்ந்திடுவோம்
அகற்றிடுவோம் மலைகளை நாம்

விவேகி: மலைகளையா? மலைகளையா
அற்பர் சிலர் அகற்றுவதா?

மூடக்கிழவர்: மலைக்க வேண்டாம் மலைக்கவேண்டாம்
மலையைக் கண்டு மலைக்கவேண்டாம்
செய்வோம் நாம் செத்திட்டால்
எம்மக்கள் செய்வார்கள்
அவர்கள் பின் பேரர்கள்
இருக்கின்றார் பெயர்த்தெறிவார்
முடியவில்லை அப்பொழுதும்
பூட்டன்கள் உள்ளார்கள்
இப்படியே பரம்பரையாய்
எல்லோரும் பாடுபட்டால்
இங்குள்ள மலைகளை நாம்
அகழ்ந்தெறிய முடியாதோ?

விவேகி: மலைகளையா! மலைகளையா!
மலைகளையா! மலைகளையா!

மூடக்கிழவர்: மலைக்கின்றீர் ஏனையா?
மலை இனிமேல் வளராது
மலை இனிமேல் வளராது
வளரும் சக்தி மக்கள் சக்தி
வளரும் சக்தி மக்கள் சக்தி

வேலைசெய்வோர்: மலை இனிமேல் வளராது
மலை இனிமேல் வளராது
வளரும் சக்தி மக்கள் சக்தி
வளரும் சக்தி மக்கள் சக்தி

மூடக்கிழவர்: மலை இனிமேல் வளராது
மலையைக் கண்டு மலைக்கவேண்டாம்

விவேகி: உம் ... உம்......
உம்...... உம் .....

உண்மை உண்மை முற்றும் உண்மை
உடலுழைப்பில் கண்ட உண்மை
செயலாலே பெற்றெடுத்த
சிந்தனையிற் றிறனாலே
செயலாற்றுகின்றீரே
சோர்ந்திடுவேன் நானும் இதில்
மலை இனிமேல் வளராது
வளரும் சக்தி மக்கள் சக்தி

[விவேகியும் வேலை செய்வோருடன் சேர்ந்து மலையைத் தோண்டுகிறார்]

ஏடக்கிழவர்: எம்மவர்கள் எம்முடனே
சேர்ந்திங்கு செயற்பட்டால்
எத்தனை நாள் இந்தமலை
எமக்கெதிரே நிமிர்ந்து நிற்கும்?

வேலைசெய்வோர்: அகழ்ந்திடுவோம் அகழ்ந்திடுவோம்
அகற்றிடுவோம் மலைகளை நாம்

[வேலைசெய்வோர் மத்தியில் இருந்து ஒரு தொழிலாளி முன் வருகிறார்]

எமக்கெதிரே நிற்கிறதே
மும்மலைகள் பெருமலைகள்
முன்னேற்றப் பாதையினை
முற்றாகத் தடுக்கின்ற
மும்மலைகள் பெருமலைகள்
ஏகாதிபத்தியத்தின்
பொருளாதாரப் பிடிப்பு
எம்நாட்டின் முன்னேற்றப்
பாதையினைத் தடுக்கின்ற
பெருமலைதான் ஒருமலையாம்
அதன்பிடியில் ஆடுகின்ற
முதலாளித்துவம் இங்கு
வகுத்துவைத்த அமைப்புமுறை
வளர்ந்து நிற்கும் ஒருமலையாம்
மற்றுமொரு பெருமலைதான்
இரு மலைகள் இடம்பெற்றும்
நில உடமை காத்துநிற்கும்

நிலப் பிரபுத்துவமும்தான்
நிமிர்ந்து நிற்கும் ஒருமலையாம்
இன்னும் ஒரு பெருமலைதான்

விவேகி: உண்மை உண்மை முற்றும் உண்மை
முன்னேற்றப் பாதையினை
முற்றாகத் தடுக்கின்ற
மும்மலைகள் பெருமலைகள்
ஏகாதிபத்தியத்தின்
பொருளாதாரப் பிடிப்பும்
முதலாளித்துவம் இங்கு
வகுத்துவைத்த அமைப்புடனே
நில உடமை காத்துநிற்கும்
நிலப் பிரப்புத்துவமும்தான்
மும்மலைகள் பெருமலைகள்

மூடக்கிழவர்: மலை இனிமேல் வளராது
மலை இனிமேல் வளராது

விவேகி: உண்மை உண்மை முற்றும் உண்மை
உடலுழைப்பில் கண்ட உண்மை

மூடக்கிழவர்; வளரும் சக்தி மக்கள் சக்தி
வளரும் சக்தி மக்கள் சக்தி

விவேகி: உண்மை உண்மை முற்றும் உண்மை
உடலுழைப்பில் கண்ட உண்மை

வேலைசெய்வோர்: அகழ்ந்திடுவோம் அகழ்ந்திடுவோம்
அகற்றிடுவோம் மலைகளை நாம்

தொழிலாளி: மூன்று இந்த மலைகளையும்
முற்றாக அகற்றிடவே
தொழிலாளி விவசாயி
விவசாயத் தொழிலாளி
வேலை அற்ற வாலிபரும்
கூலி அற்ற ஏழைகளும்
பள்ளியிலே படிக்கின்ற
பிள்ளைகளும் பெற்றோரும்
புத்தியிலே சீவிக்கின்ற

மத்யவர்க்க ஊழியரும்
சின்ன சின்ன கடைகள் வைத்த
சிறிய முதலாளிகளும்
முற்போக்குப் பாதை ஏற்ற
முதலாளித் தேசியரும்
ஒன்றிணைந்து பாடுபட்டால்
ஒன்றிணைந்து பாடுபட்டால்

மூட்டக்கிழவர்: மூன்று இந்த மலைகளையும்
முற்றாக அகற்றிடவாம்

வேலைசெய்வோர்: அகழ்ந்திடுவோம் அகழ்ந்திடுவோம்
அகற்றிடுவோம் மலைகளை நாம்

விவேகி: செயலாலே பெற்றெடுத்த
சிந்தனையின் திறனாலே
செயலாற்றுகின்ற எங்கள்
தொழிலாளர் தலைமையிலே
செயற்படுவோம் செயற்படுவோம்
ஒன்றிணைந்து செயற்படுவோம்

மூடக்கிழவர்: சென்றிடுவோம் நெடும்பயணம்
நெடும்பயணம் சென்றிடுவோம்

வேலைசெய்வோர்: சென்றிடுவோம் நெடும்பயணம்
நெடும்பயணம் சென்றிடுவோம்

மூடக்கிழவர்: முன்னேற்றப் பாதையிலே
முன்னேறிச் சென்றிடுவோம்

வேலைசெய்வோர்: முன்னேற்றப் பாதையிலே
முன்னேறிச் சென்றிடுவோம்

எல்லோரும்: மலை இனிமேல் வளராது
மலை இனிமேல் வளராது
வளரும் சக்தி மக்கள் சக்தி
வளரும் சக்தி மக்கள் சக்தி

# கலாவதி நகை மாளிகை

239, பிரதானவீதி ★ பருத்தித்துறை

தற்காலநவநாகரீகத்திற்கேற்ற
டிசைன்களில் தங்க, வைர நகைகளை
செய்பவர்கள்

ஓடர் நகைகள் குறித்த காலத்தில்
செய்து கொடுக்கப்படும்

## KLAWATHY JEWEL HOUSE

Prop: Mrs. P. Ratnasingam & Sons
239, Main Street, Point Pedro
Dial: 567



தரமான அச்சுவேலைகளுக்கு

# யாழ்ப்பாண அச்சகம்

(இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)

93, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.



இப்பத்திரிகை தேசிய கலை இலக்கியப் பேரவைக்காக யாழ்ப்பாணம், கந்தர்மடம், 54/16, ஆத்திசூடி வீதியில் வசிக்கும் க. தணிகாசலம் அவர்களால், 93, ஸ்ரான்லி வீதியிலுள்ள யாழ்ப்பாண அச்சகத்தில் 1974 ஆனி மாதம் அச்சிட்டு வெளியிடப்பட்டது.